# அமிர்தவசனி

தெய்வீக மாதப் பத்திரிகை


| | | |
|---|---|---|
| மலர் : 13<br>இதழ் : 12 | பிலவஹு பங்குனிமீ<br>மார்ச்—ஏப்ரல் '62 | வருட சந்தா<br>ரு. 3-00 |




முதலை விழுங்கிய பாலனை சுந்தரர் மீட்டல்
(சித்திர விளக்கம் பக்கம் 536)

## உள்பொருள்

பக்கம்

1. மனம் கரைக்கும் மந்திரம் (திருப்புகழ்மணி) ... 529
2. குமாரஸ்தவ விளக்கம் (திருப்புகழ் சதுரர் சே. த. ராமலிங்கம் பிள்ளை, B.A., B.T.) ... 533
3. நிறைவு (கி. வா. ஜ.) ... 536
4. 'சீரான கோலகால' திருப்புகழ் விரிவுரை (குகஸ்ரீ) 541
5. நாகனூர் (தணிகைமணி வ. சு. செங்கல்வராய பிள்ளை, M.A.,) ... 554
6. முறையோ, முறையோ (கி. வா. ஜகந்நாதன்) ... 557
7. தாயின் பிழையும் தற்பரி அருளும் (ரஸபதி) ... 560
8. மானிடர் உய்யும் வழியும் தொண்டும் (ஆ. கி. ரங்கராஜன்) ... 571
9. THE WORLD SCHOOL (*Thiruppugal Mani*) ... 575

**அமிர்தவசனி சந்தாதாரர்கட்கு வேண்டுகோள்**

சித்திரைமீ முதல் பங்குனிமீ முடிய வருடச் சந்தா உள் நாட்டிற்கு ரூ. 3. பணம் முன்னதாக அனுப்பவும். வி. பி. இல்லை.

இலங்கைக்கு நான்கு வருடச் சந்தா வி. பி. தபால் செலவு உள்பட ரூ. 14.

மலேயா, ஆப்பிரிக்கா, மற்ற நாடுகளுக்கு நான்கு வருட சந்தா முப்பது ஷில்லிங்குகள், போஸ்டல் ஆர்டராக அனுப்பவும்.

சித்திரை மாதத்திற்கு முன்னதாகவே சந்தாத் தொகையை அனுப்பினால் தொடர்ந்து பத்திரிகை கிடைக்கும். வருட நடுவில் சந்தாச் செலுத்தினால், சித்திரைமீ முதல் வந்த முன் இதழ்கள் கிடைக்கக் கூடியதை உத்தேசித்து, சந்தாத் தொகையைப் பெற்றுக் கொள்ளவோ, மறுக்கவோ நேரும்.

**அமிர்தவசனி 54, பந்தர் தெரு, சென்னை.**

**குறிப்பு :** முந்திய இதழ்களின் வருடத் தொகுப்புகள் 3-50 வீதம் கிடைக்கும். சில பிரதிகளே கைவசம் உள. தபால் செலவு ரூ. 1.

# அமிர்தவசனி

தெய்வீக மாதப்பத்திரிகை

எல்லோரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே.

ஆசிரியர்: சு. முத்துஸ்வாமி

| மலர் 13 | பிலவஹ பங்குனிமீ<br>மார்ச்சு—ஏப்ரல் 1962 | இதழ் 12 |
| --- | --- | --- |


## மனம் கரைக்கும் மந்திரம்

(திருப்புகழ் மணி)

அன்பற்ற மனத்தைக் கல்மனமென்பர். 'நான்' எனும் 'ஆணவத்தா'லேற்பட்ட சுயநலத்தால் குறுகிக் குறுகிக் கல்போல் கடினமாய் விடுகிறது மனம். கல்லுக்குணர்ச்சியில்லை; அம்மனத்திற்கும் உணர்ச்சியில்லை. பிறர் துன்பம் கண்டு இரங்காது. அன்பு கண்டும் உருகாது. திருப்புகழைப் பாடப் பாடக் கல்மனம் குழைந்து, விரிந்து வெளியாய் விடுகிறது. அம்மனமே வெளியாகிய ஆகாயத்தில் தனது கருணை மழையைக் கொட்டுகிறான் முருகன். அவ்வருள் வெள்ளத்தில் முத்துக் குளிப்பவர்போல் முழுகினால், முக்திக்கு வித்தாகிய முருகனெனும் வித்து கிடைக்கும்.

"ஆழக் கடல் குளித்து ஆணி முத்தெடுத்தது போல்
அருட்கடலில் நான் குளித்து முருகனென்ற
[முத்தெடுத்தேன்"

---

உடை தோய்த்துக் கட்டா உலுத்தர் இடத்தில்,
நடைஒழுக்க உத்தமர்கள், நண்ணுமல் நீங்குவரே.

என்றார், ஆண்டவன் பிச்சையாகிய ஸ்ரீமத்தா அம்மையார்.

மனிதனுடைய மனோவெளியில் பிறவி யென்னும் மரம் தோன்றி வேரூன்றித் தழைத்து விட்டது. அம்மரத்தின் வேரை யறுத்தால் பிறவியென்னும் துன்பம அறலாம். அறுப்பதெப்படி? அஞ்ச வேண்டாம். திருப்புகழெனும் கூர்மையான கத்தி கொடுத்திருக்கிறார் அருணகிரியார்: அககத்தியைக் கொண்டால் எளிதா யறுத்து விடலாம். திருப்புகழால் பிறவி மரத்தின் வேரை யறுத்து திருப்புகழ்க் கட்டிடத்தை யங்குக் கட்டவேண்டும். அக் கட்டிடத்தில் வேதாந்த மரமாகிய முருகன் வேரூன்றி வளர்வான்.

பரமசிவன் தனது ஜோதியையும், திருமால் தனது கருணையையும் முருகனிடம் கொட்டி விட்டனர். அம்மையாம் கருணையும் அப்பனும் ஜோதியும் இருபுற மணைக்க, அருட்பெருஞ்சோதி தனிப்பெருங் கருணை யாய் இருவருக்கும் நடுவில் விளங்குகிறான் முருகன்.

அறிவை அறிவிக்கும் ஜோதியே பரமசிவன். அவன் எல்லா உயிரினிடத்திலும் விளையாடுகிறான். வானூரும் மதியானும், வரையூரும் நதியானுமாகிய சிவனது சடை, வானவெளியெங்கும் பரவியிருக்கிறது. வானில் தவழும் மதியும் அவன் சடையி லூர்கிறதாம். இமயமலையும் அவன் சடையி லடக்க மென்பதற்கு ஐயமுண்டோ? அம்மலை யிலிருந்து பெருகும் நதியாகிய கங்கையும அவன் சடையி லிருந்தே வெளிவரு கிறதாம். வேள்விப் பயனாகிய சாநதியெனும் மானைக் கையில் பிடித்துக கொண்டு, மானூரும கையனைப்

---

கவரிமயிர், தந்தம், கலைஞர், புலிப்பல,
இவர் புகழ்கள், தோன்றிடததில் எந்நாளும் இல்லையரோ.

விளங்குகிறான். அரவூரும் தொடையானவன்: ஆலன் இடமூரும் மாதன். பாம்பு உடம்பெங்கும் மாலையாகச் சுற்றிக் கொண்டிருக்கிறது. இடப்பாகத்தில் இமவான் மகளாகிய பார்வதி அச்சமின்றி அமர்ந்திருக்கிறாள். பார்வதியோ பரமசிவனுடைய சக்தி. சக்தித் திவலைகளே பாம்பாக அவனுடம்பில் ஊறிக் கொண்டிருக்கின்றன. சக்தியின்றி சிவனுக்குச் செயலேது? அருளூறும் கொடையானாகிய அப்பன், சிவ சிவாவென்பவர்க்குத் தன் சக்தி யனைத்தும் கொடுத்து விடுவான்.

அச்சக்தியே பணமாகவும், பலமாகவும் அறிவாகவும் வெளிவருகிறது. அவற்றைச் சரியான வழியி லுபயோகித்தா லின்புறலாம். தீய வழியில் பிறரைக் கெடுப்பதற்கு அச்சக்திகளை உபயோகிப் பவரை, இடரூரும் மழுவானாகிய அவன் கைம்மழு அழித்துவிடும அவர்கள் சூரன்போல் இராவணன் போல் தானே யழிந்துவிடுவர். அப்பனும் பரமசிவன் கைமழுவே, மைந்தனாகிய கந்தன் கை வேலாயிருக்கிறது.

தவம் செய்து சிவனிடம் வரம் பெற்றான் பத்மாஸூரன. தான் கைவைக்கும் பொருளெல்லாம் அழிந்து விட வேண்டுமென்று விரும்பினான். அடியார்க் கெளியனாகிய பரமசிவன் அவன் வேண்டிய வரத்தைக கொடுத்து விட்டான். அச்சக்தியைச் சிவனிடமே உபயோகிக்க நினைத்தான். சிவன் தலையில் கையைவைக்க அவனைத் துரத்திக் கொண்டோடினான். சிவன் தன் சக்தியை மோகினி யுருவெடுக்கச் செய்தான். பத்மாஸூரனைப் பார்த்து, இவளை வென்றால்

---

தலைமயிர், நகம்,பற்கள், தக்ககலை வாணர்
நிலைதவரில், இவ்வுலகம் நீத்து மறந்திடுமே.

என் தலையில் கைவைக்கலாம் என்றான். அவளழகில் மயங்கினன் அசுரன். மோகினி நடனமாடினள் அசுரனும், அவளுடன் நடனமாடினன்.

தாயை வெல்ல முடியுமா? அவள் மாயத்தால் அசுரன் தன்தலையிலேயே கையை வைத்து மாண்டான். தன் சக்தியைத் தீயவழியி லுபயோகிப் பவனை அச்சக்தியே அழித்து விடும் என்பதைக் குறிப்பதே இக்கதை.

விதியிலகப்பட்டு கதியிலையே யென்று வருந்த வேண்டாம். அவனடியை நினைத்து நீற்றைப் பூசினல், வீடும் அடியாஞகிய பரமசிவன், விதியை யழித்து நிலையான இன்ப வீட்டை யளித்து விடுவான். சிவ மென்றுணர்ந்தார்க்குத் தவமாகவும், உணராமல் அவமதித்தார்க்கு அவமாகவும் உள்ளது அந்நீறே. மந்திரமாவது நீறென்றோதி திருநீற்றைப் பாண்டிய னுடம்பில் பூசினர் ஞானசம்பந்தர். தனது வெப்பு நோயுடன் பிறவிநோயும் நீங்கப் பெற்றான் பாண்டியன். நாமும் நீறணிந்து வினைகளை நீருக்கு வோம். திருப்புகழைப் பாடிப் பிறவியற்ற பேரின்பத் தில் திளைப்போம்.

---

**கவனிக்கவும் :**

வருகிற சுபகிருது ஆண்டு சந்தா ரூ. மூன்றையும் அனுப்பி வைக்கவும்.

---

மந்தமிலா மககளதாம் மனனுபிழை செய்தாலும்
சிநதிததுப பின்னர், சிறககத திருநதுவரே.

# குமாரஸ்தவ விளக்கம்

(திருப்புகழ் சதுரர் சே. த. ராமலிங்கம்பிள்ளை, B.A.,B.T.)

## 10. சுரபதி பதயே நமோநம:

சுரபதி - தேவராஜனுன ; பதயே - தலைவனுக்கு ; நமோ நம: - போற்றி போற்றி.

**சுரபதி :**

நரர் என்ற மானிடரைக் காக்கும் காவலன் நரபதி. அதுபோல் சுரர் என்னும் தேவரைக் காக்கும் காவலன் சுரபதியாகும். இது தேவராசனுன இந்திரனைக் குறிக்கும். ஆயினும் அமரேசனை முழுதும் காத்த அண்ணலே சுரபதி என்னல் பொருத்தமாம். தேவராசன் நமது குமாரராஜனைத் தன்னுடைய உலகத்தையும், மக்களான தேவரையும் காக்குமாறு வேண்டித் துதித்ததுண்டு.

" கம்பியாது இந்த்ரலோகங்கள் ' கா ' என்று அ் ஆகண்டலேசன் சொல்வீரா " (திருப்புகழ்)

[அசுரரால் நடுக்கங் கொள்ளாமல் இந்திர லோகங்களைக் காத்தருள்க என்று அந்த ஆகண்டலேசன் (தேவேந்திரன்) புகழ்ந்த வீரனே].

மேலும் தேவர்கட்குத் தலைவனுன தேவேந்திரன் பதவி ஏற்றவா மிகப் பலருள்ளனர். கங்கையின் கரையில் உள்ள மணலளவு எண்ணிக்கை யுடைய இந்திரர்கள் தோன்றி மடிந்தனர் என்பதை,

---

ஆய்பொறுமை, தொண்டுமனம், அன்னைதயை, நல்லறிவு,
வாய்த்தமனை சேர்ந்தோர், வையகத்து வாழ்பவரே.

"ஏறு கங்கை மணல் எண்ணில் இந்திரர்" என்று அப்பர் அருள்வாக்கால் அறிகிறோம். ஆதலின், அவ்வித தேவேந்திரர்கள் பலருக்கும் முருகவேள் தலைவனாக உள்ளான்

"பழுகி மலை வந்துற்ற இந்திரர்கள் - தம்பிரானே"

"அஷ்டவொடு உலகங்கள் யாவும்
முதலின நிலை கண்ட பாவை
அருள் புதல்வ! அண்டராஜர் - பெருமானே.

(அண்டர் - தேவர்; அண்டராஜர் - தேவேந்திரர்கள்)

## தேவர்பதி:

குகப்பரமன் தேவர்கள் முதலியோர் பொருட்டே அருளுருக் கொண்டான்.

"வானவர் பொருட்டும் மகவானது பொருட்டும், மலர் வாவியி லுதித்த முக மாயைக்காரன்" என்பதாலும், "உம்பர்கள் சுவாமீ நமோ நம" என்று செந்தில் செந்தமிழ்ப் பாடலும்,

"தேவ தேவோத்தமா! தேவதா சார்வ பௌமா
அகிலாண்ட கோடி பிரமமாண்ட நாயக"

என வடமொழித் தோத்திரமும் கூறுவதாலும், தேவர்கள் பொருட்டே அவதரித்து தேவசேனைக்கும் நாயகனாகி தேவர் சிறை வெட்டி விட்ட தேவர் தலைவனான குமரன் சுரபதியாதல் நியாயந்தானே!

## முத்தேவர் முதல்வர்:

தேவரில் ஆக்கல், அளித்தல், அழித்தல் ஆகிய முத் தொழில் செய்யும் முத்தேவர் சிறந்தவர். அந்த மூவரும்

---

குழலினிமை போல் குரலும், சேய்மனமும் கொண்டு, பழகும் அறுசுவையூண் ஊட்டுபவள், பத்தினியே.

முத்தொழில் செய்யுமாறு ஏவும் முழுமுதல்— முத்துக்குமரன் மூவர்க்கும் தேவர்க்கும் முதல்வன்.

' படைக்கப் பங்கயன், துடைக்கச் சங்கரன்,
புரக்கக் கஞ்சைமன்—பணியாகப்
பணித்துத் தம்பயந் தணித்துச் சாததம்
பரதத்தைக் கொண்டிடும்—தனிவேலா,

[பஙகயன் - பிரமன். கஞ்சைமன் - லட்சுமீ காந்தனை திருமால்.]

" படைத்தளித்து அழிக்கும் த்ரிமூர்த்திகள் - தம்பிரானே
மூவர் தேவாதிகள்—தம்பிரானே "

## தேவாதிதேவன்:

தேவர்களில் சிறந்தவர் மகாதேவர். இவரைப் பற்றி தோத்திரப் பனுவல் ஒன்று உண்டு. அதற்கு மகாதேவமாலை என்று பெயர். இதனை அருளியவர் வடலூர் வள்ளலார். அவர் மகாதேவமாலைப் பாடல் ஒவ்வொன்றின் இறுதியிலும், "தேவதேவே" என்று முடித்து மகாதேவன் என்ற சொல்லின் பொருளை விளக்கியுள்ளார். நமது செவ்வேட் பரமன் தேவரெலலாம் தொழும் தேவரான மகா தேவர்க்கும் உபதேசித்த தேவாதிதேவர் அல்லவா? ஆகையால் அருணகிரியார்,

தேவ தேவ தேவாதி தேவப் பெரியோனே எனப் போற்றும் அழகை எண்ணுந்தோறும் இதயம் களி துளும்புகிறதே! இதனாலன்றோ எங்கள் பாம்பனடிகளும் "சுரபதி பதயே நமோநம" என்கிறார்.

---

மும்மை யுகமூன்றை, மும்மாதர் தமைழித்தார்;
இம்மையுகம் ஈதெண்ணி, நெஞ்சமிடி கின்றதுவே.

## நிறைவு

### (கி. வா. ஜ.)

திருவாரூரில் சுந்தரமூர்த்தி நாயனார் இருந்தபோது மீட்டும் திருவஞ்சைக் களம் சென்று சேரமான பெருமானைப் பார்த்து வரவேண்டும் என்ற விருப்பம் எழுந்தது. அதனால் திருவாரூரினின்றும் புறப்பட்டு, இடையிலுள்ள தலங்களைத் தரிசித்துக் கொண்டு கொங்குநாட்டில் உள்ள திருப்புக்கொளியூர் அவிநாசி என்னும் திருப்பதியை அடைந்தார்.

மறையோர் வாழும் வீதியின் மருங்கே அவர் வந்து கொண்டிருந்தபோது, அங்கே ஒரு வீட்டில் மங்கல வாத்தியங்கள் ஒலித்துக் கொண்டிருந்தன; அவ்வீட்டு வாயிலில் தோரணம், வாழை முதலியவற்றைக் கட்டியிருந்தார்கள். அதற்கு எதிர் வீட்டில் அழுகை யொலி கேட்டது. இவற்றைக் கவனித்த சுந்தரர் அருகிலுள்ளோரை, "ஏன் இப்படி இரு வேறு வீடுகளிலும் இரு வேறு ஒலிகள் கேட்கின்றன?" என்று வினவினார்.

"சில ஆண்டுகளுக்கு முன்பு இந்த இரண்டு வீடுகளிலும் இருந்த இரண்டு பிள்ளைகள் இவ்வூர்ப் பொய்கைக்கு நீராடச் சென்றார்கள். அப்போது அவர்களுக்கு ஐந்து பிராயம். நீராடியபோது ஒரு பிள்ளையை மடுவில் இருந்த முதலை விழுங்கிவிட்டது. பிழைத்து வந்த பிள்ளைக்கு இன்று உபநயனம் நடக்கிறது. அந்த வீட்டு மேளவாத்தியம் அதைக்காட்டுகிறது. இந்த வீட்டிலுள்ளவர்கள், 'நம் பிள்ளை உயிரோடிருந்தால் அவனுக்கும் இப்படி உபநயனம் செய்து களிக்கலாமே; அது இல்லாமற் போயிற்றே' என்று வருந்தி அழுகிறார்கள்" என்று அவர் காரணத்தை விளக்கினார்.

இதைக் கேட்ட சுந்தரர் மிக இரக்கம் கொண்டார். பிள்ளையை இழந்த வீட்டுக்காரர்கள் அவரைக் கண்டு தம் வருத்தத்தை மறைத்துக்கொண்டு வந்து அவருடைய திருத்தாளை

---

பெற்றஇளங் கன்றின்பின் நீங்காத பெற்றமென,
பற்றுசிவ என்றழைத்தால், பற்றவரும் எம்பரனே!

இறைஞ்சினார்கள். அவர்களைக் கண்ட சுந்தரர், "நீங்கள் உங்கள் மைந்தனை இழந்து விட்டீர்களோ?" என்று கேட்க, "அது முன்னே நிகழ்ந்த செய்தி; இப்போது தேவரீர் இங்கே எழுந்தருளப்பெறும் பேறு எங்களுக்குக் கிடைத்தது" என்று கூறித் தொழுதார்கள்.

'நாம் வந்த இதற்கு மகிழ்ந்து, தம துயரத்தையும் மறந்து நிற்கும் இவர்களுடைய மைந்தனை இறைவன திருவருளால் மீண்டும் வருவித்துக் கொடுக்கவேண்டும்' என்று ஆளுடை நம்பி திருவுள்ளம் கொண்டார். "முதலை பிள்ளையை விழுங்கிய மடு எங்கே?" என்று கேட்க அவர்கள் அங்கே அவரை அழைத்துச் சென்றார்கள். அங்கே நின்று அவிநாசியப்பரை எண்ணி, "எற்றான் மறக்கேன்" என்று ஒரு திருப்பதிகம் பாடத் தொடங்கினார். மூன்று பாடல்கள் பாடி நான்காவது பாட்டையும் பாடலானார்.

"உரைப்பார் உரையுகந் துள்கவல் லார்தங்கள் உச்சியாய்
அரைக்கா டரவா ஆதியும் அந்தமும் ஆயினுய்
புரைக்காடு சோலைப் புக்கொளியூர்அவி நாசியே
கரைக்கால் முதலையைப் பிள்ளை தரச்சொல்லு காலனையே"

என்ற பாட்டு வெளியாயிற்று. இந்தப் பாட்டு முடிவதற்குள் ஒரு முதலை கரையருகே வந்து ஒரு பிள்ளையைக் கக்கியது. அதுவரையில அந்தப்பிள்ளை உலகில் வாழ்ந்திருந்தால் எவ்வளவு வளர்ந்திருப்பானோ அவ்வளவு வளர்ச்சியுடன் அவன் இருந்தான். பிள்ளையைக் கண்ட தாய் ஓடி எடுத்துவந்து சுந்தரர் காலில் கிடத்தித் தானும் விழுந்தாள்; அவளுடைய கணவரும் விழுந்தார். வானவர் பூமாரி பொழிந்தனர். மண்ணவர் அதிசயித்தார்கள். யாவரும் திருக்கோயில் சென்று இறைவனைப் பணிந்தார்கள்.

அப்பால் முதலை வாயினின்றும் மீண்ட பிள்ளைக்கு அன்றே உபநயனம் செய்யச் செய்து உடனிருந்து ஆசி கூறிய சுந்தரர், யாவரிடமும் விடைபெற்றுக் கொண்டு சேரமான் பெருமானை நோக்கிப் புறப்பட்டார்.

---

மலர்பிஞ்சு காய்கனிகள் உள்ளமரம், முள்ளாம்;
சிலரதுபோல், உள்புகுந்து சேதிப்பார் நல்லறமே.

இடையிலுள்ள தலங்களைத் தரிசித்து மலைகளையும் ஆறுகளையும் கடந்து மலைநாட்டை அடைந்தார். "முதலைவாயிற் புகுந்த பிள்ளையை மீண்டும் வருவித்து அளித்துச் சுந்தரர் வஞ்சிமா நகரத்தை நோக்கி வருகின்றார்" என்பதை அடியவர்கள் ஓடிவந்து முன்னதாகவே சேரமான் பெருமானிடம் தெரிவித்தார்கள். சேரமனனர் களிக்கடலில மூழ்கித் திணறினார். அவருடைய வரவை முரசறைந்து எங்கும் தெரிவிக்கச் செய்தார். நகரத்தை நனருக அலங்கரிக்கச சொன்னார். யானையை அணிசெய்து எதிர்கொண்டு அழைத்துவரப் புறப்பட்டார். நகரில் புகுந்த சுந்தரரைச் சேரமான் வணங்க, மன்னரை நாவல் ஆரூரரும் பணிந்து நலம் விசாரித்தனர். நட்பிலே சிறந்த இவவிருவரும் அளவளாவினர். சேரமான் சுந்தரரை யானையினமேல் ஏறறித் தாமும் பின் ஏறி அவருக்குக் குடை பிடித்தார். நகரை வலம்வரச் செய்து வஞ்சிமாநகர் அரண்மனைக்கு அழைத்துச் சென்றார். சிலநாட்கள் அங்கே பலவகை உபசாரங்களையும் பெற்றுத் தங்கியிருந்தார்.

ஒருநாள் திருவஞ்சைக்களத திருககோயிலுககுச் சென்று இறைவனைத் தரிசனம் செய்யத் தொடங்கினார். அப்போது அவருக்கு இறைவனோடு ஒனறவேண்டும் எனற எண்ணம் உண்டாயிற்று. இநத வாழ்க்கையினின்றும் நீஙகிச செல்ல வேண்டும் எனக் கருதினார். "தலைக்குத் தலைமாலை அணிந்த தென்னே" என்று தொடஙகும் திருபபதிகததைப பாடலானார். எட்டாவது திருபபாட்டில், "வெறுத்தேன மனைவாழக்கையை விட்டொழித்தேன் விளஙகும் குழைக் காதுடை வேதியனே" என்பதில் தம் கருத்தைக் குறிபபித்தார்.

அவருடைய உளளக் கிடக்கையை உணர்ந்த சிவபெருமான் பழையபடியே சுநதரரைத் தனனுடைய அணுக்கத் தொண்டராககிக் கொள்ளத் திருவுள்ளம் பூண்டான். பிரமன முதலிய தேவர்களை அழைத்து, "நாவலாரூரனை வெள்ளை யானையின்மேல் ஏற்றிககொண்டு இங்கே அழைத்துவாருங்கள்" என்று ஏவினான. அவர்கள அவ்வாறே திருவஞ்சைக்களம் சென்று கோயில வாயிலில காததது நிறகப் புறத்தே சுநதரர் வநதபோது, "எம்பெருமான அருளிப்பாடு இது" என்று

மலர்த்தேனை வண்டுறிஞ்சும் மாண்பதுபோல், செய்யும்
சிலஉத்வி தன்னை, ஏற்பார் சிறந்தவரே.

தெரிவித்தார்கள். உடனே அந்த யானையின்மேல் ஏறித் தேவர் புடை சூழச் சுந்தரர் கைலையை நோக்கிப் புறப்பட்டார். அப்போது அவர் தம் தோழராகிய சேரமான் பெருமானை நினைத்துக் கொண்டு சென்றார். அதனை உணர்ந்த சேரர் ஒரு குதிரையில் ஏறித் திருவஞ்சைக்களம் ஆலயத்துக்கு வந்தவர், வெள்ளை யானையின்மேல் செல்லும் சுந்தரரைக் கண்டார். உடனே குதிரையின் காதில் பஞ்சாட்சரத்தை ஓதவே, அது வானின்மீது பாய்ந்து செல்லத் தொடங்கியது. சுந்தரர் ஊர்ந்து சென்ற யானையை வலங்கொண்டு அதற்கும் முன்னாக அது வேகமாகச் சென்றது.

யானையின்மேல் சென்ற சுந்தரர் இறைவன் திருவருளை எண்ணி வியந்து ஒரு திருப்பதிகத்தைப் பாடினார்.

தானெனை முன்படைத்தான் அதறிந்துதன் பொன்னடிக்கே
நான் என பாடல் அந்தோ நாயினேனைப் பொருட்படுத்து
வானெனை வந்தெதிர் கொள்ள மத்தயானை அருள்புரிந்து
ஊனுயிர் வேறு செய்தான் நொடித்தான்மலை உத்தமனே.

என்பது அப்பதிகத்தின் முதற்பாடல்.

திருக்கைலையில் தென் திசைத் திருவாயிலை அடைந்தார் சுந்தரர். அங்கே சுந்தரரும் சேரமானும் முறையே யானையினின்றும் குதிரையினின்றும் இறங்கிப் பலவாயில்களைக் கடந்து திரு அணுக்கன் திருவாயிலை அடைந்தார்கள். சுந்தரர் உள்ளே புகுந்தார். ஆனால் சேரமான் உள்ளே புகமுடியாமல் தடையுண்டு நின்றார்.

உள்ளே சென்ற சுந்தரர் சிவபெருமானை ஆராத காதலுடன் தரிசித்துக் கீழே விழுந்து எழுந்து புளகம் போர்ப்ப நின்றார். இறைவன் அவரைப் பார்த்து, "ஊரனே, வந்தாயா?" என்று அன்புடன் வினவினான். "அடியேனை ஆட்கொண்டு அடியேன் பிழையைப் பொறுத்து முடிவிலாத நெறியிலே ஈடுபடுத்திய தேவரீர் பெருங்கருணை எளியேனால் சொல்லும் தரத்ததோ!" என்று சொல்லி உருகி நின்றார் சுந்தரர். பிறகு, "வாயிற் புறத்தில் சேரமான் பெருமான் நிற்கின்றார்" என்று சொல்ல, எம்பெருமான் திருநந்திதேவரைக் கொண்டு அவரை அழைத்துவரச் செய்தான்.

---

தந்தை இறந்தபின்னர், கல்விக் கிடமில்லை;
சொந்த தம்முன் போனபின்னர், தோள்வலிபோம் திண்ணமிதே.

சேரமான் பெருமாள் இறைவன் திருமுன்பு வந்து வணங்கி நிற்க இறைவன் புன் முறுவல் பூத்தவனாய், "நாம் அழையாமலே நீ ஏன் வந்தாய்?" எனக் கேட்டான. சேர மன்னர் அஞ்சலி செய்து, "எம்பெருமானே, அடியேன் ஆரூரர் கழலைப் போற்றி அவருடைய யானைக்கு முன்னே சேவித்தபடி வந்தேன். தேவரீருடைய கருணை வெள்ளம் இங்கே அழைத்து வந்தது. அதனால திருமுன் வந்தேன். அடியேன செய்துகொள்ளும் விண்ணப்பம் ஒன்று உண்டு" என்றார். இறைவன், "என்ன?" என்று கேட்க, "எம் பெருமானே, அடியேன் திருக்கைலையைப் பற்றி ஓர் உலா வைப் பாடியுள்ளேன்; அதைத் திருச செவியில் சாத்தியருள வேண்டும். எனனுடைய பாசம் நீங்க இந்த வனறொண்டரு டைய நட்பை எனககு அருளிய பெருமானல்லவா?" என்றார்.

சிவபெருமான், அதனைச் சொல்லுக என்று பணிக்கவே, அங்கே சேரர் *ஆதியுலாவை விண்ணப்பித்துக கொண்டார். கேட்டு மகிழ்ந்த எம்பெருமான, "நீங்கள் இருவரும் நம்மு டைய கணநாதராக இருங்கள்" என்று அருள செய்தான்.

அது முதல் வன்றொண்டர் பழையபடியே ஆலால சுந்தர ராகித தொண்டு செயது வரலானார, சேரமான பெருமாள் ஒரு கணநாதராக அங்கே இருந்து இறைவனுக்குரிய பணி களை ஆற்றிவரத் தொடங்கினார்.

பரவையார், சங்கிலியார் எனனும் இருவரும் பாசத் தொடக்கறுதது, இறைவியின் திருவருளால் மீண்டும் கமலினி யாராகவும் அநிந்திதையாராகவும் வந்து சேர்ந்தனர்.

சுந்தரர் பாடிய "தானெனை முன படைததான்" என்ற பதிகத்தை அவர் வருணனாகிய ஆழிவேந்தனிடம் அளிக்க, அவன் அதைத் திருவஞ்சைக களத்துககுக் கொண்டு வந்து சேர்ப்பித்தான. ஆதியுலாவைக் கைலையில் கேட்ட சாத்த னார் திருப்பிடவூர் என்னும் ஊரில் வநது வெளிபபடுத்தினார்.

இவ்வாறு உலகம் உய்யவும் திருததொணடத் தொகை யினால நாயன்மார்கள் புகழ் பரவவும் திருவவதாரம் செய்த சுநதரமூர்த்தி நாயனார் சைவசமயாசாரியரில ஒருவராக நின்று, யாவரும் புகழ்ந்து போற்றும் சிறப்போடு நிலவுகிறார்.

---

*ஆதியுலா, குகஸ்ரீ ரஸபதியின் விரிவான உரையுடன், அமிர்தவசனி காரியாலயத்தில் கிடைக்கும்.

541

## விராலிமலை

# திருப்புகழ் விரிவுரை

(குகஸ்ரீ)

சீரான கோல கால நவமணி
மாலாபி ஷேக பார வெகுவித
தேவாதி தேவர் சேவை செயுமுக — மலராறும்,
சீராடு வீர மாது மருவிய
ஈராறு தோளு நீளும் வரியளி
சீராக மோது பரிமள — இருதாளும்,
ஆராத காதல் வேடர் மடமகள்
ஜீமூத மூர்வ லாரி மடமகள்
ஆதார பூத மாக வலமிட — முறைவாழ்வும்,
ஆராயும் நீதி வேலு மயிலுமெய்ஞ்
ஞானபி ராம தாப வடிவமும்
ஆபாத னேனு நாளு நினைவது — பெறவேணும்;
ஏராரு மாட கூட மதுரையில்
மீதேறி மாறி யாடு மிறையவர்
ஏழேழு பேர்கள் கூற வருபொரு ளதிகாரம்,
ஈடாய வூமர் போல வணிகரி
லூடாடி யால வாயில் விதிசெய்த
லீலாவி சார தீர வரதர — குருநாதா!
கூராழி யால்முன் வீயி தினபவ
னீடேறு மாறு பாநு மறைவுசெய்
கோபால ராய னேய முளதிரு — மருகோனே!
கோடாம லார வார அலையெறி
காவேரி யாறு பாயும் வயலியில்
கோனாடு சூழ்வி ராலி மலையுறை — பெருமானே!

---

ஈசனெதிர் நிற்கலாம்; எம்மான் அருள்பெற்ற
நேசரெதிர், அச்சமின்றி நிற்பதுவும் தீதாமே.

(பதவுரை) (ஏர் ஆரும்.........குருநாதா !)

ஏர் ஆரும் மாட கூட மதுரையில் மீது ஏறி - பொலிவு மிக்க (நான்) மாடக் கூடல் எனும் (பயனுள) மதுரைப் பதியின் மேல், (எடுப்பான வெள்ளி யம்பலத்தில்) ஏறி ;

மாறி ஆடும் இறையவர் - (கால்) மாறி ஆடிய எங்குமான எம்மான் (அருளியதும்) ;

ஏழ் ஏழு பேர்கள் கூற வருபொருள் அதிகாரம் - நாற்பத் தொன்பது புலவர்கள் (உரை) கூற, விரிவான பல நுட்பங்கள் வெளியான இறையனார் அகப்பொருள் நூலின் ;

(அதிகாரம்—அதிகரித்தலை யுடையது:)

ஈடு ஆய ஊமர் போல வணிகரில் ஊடாடி - (மூலத் திற்குப்) பொருத்தம் (ஆன உரையை) ஆய்ந்து அறிவிக்க, (உருத்திர சன்ம) செட்டியாராக, (நலமிகு புலவர்கள்) நடு விருந்து, (கம்பீர) மெய்ப்பாடு காட்டி ;

ஆலவாயில் விதி செய்த லீலா - திருவாலவாய்த் திருக் கோயிலில், (நக்கீரர் உரையே பொருளுரை என்று தீர்ப்பு அளித்த (புனிதத்) திருவிளையாடல் புரிதவனே !

விசார தீர - விசேட சாரம் அறியும் தீரனே !

வரதர - வரம் வழங்கும் வண்மையனே !

குருநாதா - குருமுதல்வராகக் குலவுபவனே !

(கூர் ஆழி.........மருகோனே !)

கூர் ஆழியால் பாநு மறைவு செய் - கூர்மை யுடைய சக்கரத்தால் (மாபெரும்) பரிதியை மறைத்தருளிய ;

கோபால ராயன் நேயம் உள திரு மருகோனே - இடையர் தலைவனான கண்ணன் அன்பு கொண்ட திருமகளின் மருமகனே !

---

காட்டுத்தீ, எங்கும் கவிந்தஇருள் போக்கிடினும்,
வீட்டுவிளக் கில்தீ, விளங்குவபோல் ஆகாதே.

(கோடாமல்.........பெருமாளே !)

கோடாமல் ஆரவார அலை எறி - (என்றும்) தவறாமல் ஆர்வாரித்து அலைகள் மோதுகின்ற ;

காவேரி ஆறு பாயும் வயலியில் - காவிரி நதி பாய்ந்து (வளம் கொழிக்கும்) வயலூரிலும் ;

கோடுடு சூழ் விராலி மலையுறை பெருமாளே - கோடுட்டை (முற்றுகை யிட்டது போல்) சூழ்ந்த விராலி மலையிலும் தங்கி (அரிய) பெருமையை ஆள்பவனே !

(சீரான.........பெறவேணும்.)

சீர் ஆன கோல கால நவமணி மாலா - சிறப்பானதும், நிறை ஒளி நிரம்பியதுமான ஒன்பது ரத்தினங்களை வரிசைப் பட ஊன்றி வைத்துள :

அபிஷேக பார - (சுய) மகிமை யுடைய முடியைச் சூடியதும் ; (*பாரம் - மகிமை. அபிஷேகம் - முடி.*)

வெகுவித தேவ ஆதி தேவர் சேவை செயும் முகமலர் ஆறும் - அளவிலாத வானவர்கள், (அவர்களது) முதல்வர் களான அதிபர்கள் (முதலினோர்) சேவிப்பதுமான ஆறு திருமுக மலர்களையும் ;

சீர் ஆடு வீர மாது மருவிய ஈராறு தோளும் - விளங்கும் சிறப்புடைய வீரலட்சுமி தழுவிய (திகழும்) பன்னிரு திருத் தோள்களையும் ;

•நீளும் வரி அளி சீராகம் ஓதும் நீப பரிமள இரு தாளும் - (உடலில) நீண்ட ரேகைகளை யுடைய வண்டுகள், ஸ்ரீராகம் பாடும் கடப்ப மலரின் மணம் கமழும் இரு திருவடிகளையும் ;

•ஆராத காதல் வேடர் மகள் - அடங்காத காதலை யுடைய மறவர் இள மகளான வள்ளியார் ;

---

எங்கும் இறைசெயலே என்றாலும், அன்பரிடம் .
•பொங்கும் திருவருளைக் காண்கின்றார் புண்ணியரே.

ஜீ மூதம் ஊர் வலாரி மடமகள் - மூகில்களை வாகனமாக கொண்டவனும், (அவுணரை) வலனை அழித்தவனுமான இந்திரன்து இளம் குமாரியான தேவயானையார் (எனும் இரு தேவியர்); (ஜீ மூதம் - மேகம்.)

ஆதார பூதம் ஆக வலம் இடம் உறை வாழ்வும் (உலகை உய்விக்கும்) ஆதார சக்திகளாக வலத்திலும் இடப் புறத்திலும் இருக்கும் வாழ்வையும்;

ஆராயும் நீதி வேலும் மயிலும் - நியதியை ஆய்கின்ற (ஞான சக்தியான) வேலையும், (மாபெரும் விந்து ரூப) மயிலை யும்;

மெய்ஞ்ஞான அபிராம தாப வடிவமும் - சத்தும் சித்து மான ஆர்வத்தைப் பெருக்கும் அழகு மயமான திருமேனியை யும்; (அபிராமம் - அழகு. தாபம் - அளவிலாத வேட்கை.)

ஆபாதனேனும் நாளும் நினைவது பெறவேணும் - அள விறந்த தீவினையன் ஆன அடியேனும், எந்நாளும் தியானிக்கும் படி, (பரம அருளைப்) பாலிக்க வேணும், (எ - று).

விரிவுரை

## வழிவகை வகுத்தார்

கடம்ப மரங்களே நிறைந்தது ஒரு காடு. அதன் கிழக்கில் இருந்தது மணவூர். அரசர் குலசேகரர், அப்பதியை ஆண்ட வர். மன்னர் நண்பர் தனஞ்செய செட்டியார்.

காலை மணி எட்டு. வேர்த்து விறுவிறுத்து, செட்டியார் வேந்தர் முன் வந்தார்.

அரசர் பெரும! வர்த்தகம் காரணமாக வெளியூர்க்குச் சென்றேன். மீண்டேன். வழியிடைப் பட்டது கடம்பவனம்.

---

நரகமுறும் என்று,பிற நங்கையரைச் சாரார்
திருமுகத்தைக் கண்டாலும், தெய்வஅருள் நேரும்மே.

சூரியன் அஸ்தமித்தான். எங்கும் இருள் சூழ்ந்தது. மருண்டது மனம். இரவு மணி எட்டு.

கண்ணிற்கு எட்டிய தூரத்தில்; பளபளத்தது ஒளி. அங்கு விரைந்தேன். என்ன அதிசயம்! எட்டு யானைகள். அவைகளின் மேல், ஒரு விமானம். அதனில் இலிங்க உருவில் இறைவன்.

தூய மேனியர் பலர், தொடர்ந்து வந்தனர். வரத சிவத்தை, நான்கு யாமத்தும் வழிபட்டனர். இரவு முழுதும், அந்த ஈடு பாட்டில் இருந்தேன். பொழுது விடியும் நேரம். என்ன அற்புதம்! கண்ணிமை நேரத்தில், இருந்தவர் மறைந்தனர்.

ஆஹா! அவர்கள் அமரர்கள் என்று, அதன்பின் அறிந்தேன். அதைத் தங்கட்கு அறிவிக்க நினைத்தேன். நேரே இங்கு வந்தேன் என்று, இன்பக் கண்ணீரை சொட்டியவர் இறைத்தார். செய்தி கேட்ட மன்னர் மெய் சிலிர்த்தது.

அன்று முழுதும், அரசர்க்கு அதே நினைவு. காட்டிலிருக்கும் பெருமானை, கருதியபடியே கண்ணுறங்கினார். இரவு மணி மூன்று. எல்லாம் வல்ல சித்தர் எதிர் நின்றார். எண்ணுவது போதாது; செயலில் இறங்கு! ஒரு நகரை அங்கு உருவாக்கு. வசிப்பவர் வாழ்வடைய, பாண்டியா! மகத்தான ஒரு ஆலயம் சமைக்க மறவாதே! என்றார்.

வேந்தர் திடுக்கிட்டு விழித்தார். வியர்த்தது மேனி. அமல பரமா! விமல முதலே! என்று, கூப்பிய கரங்கொண்டு கும்பிட்டார்.

எழுந்தார். பரிசனங்களுடன் விரைந்தார். கடம்பவனக் கண்ணுதலைக் கண்டார். அடியற்ற மரம்போல் அடியில் விழுந்தார். ஏத்திப் போற்றி இறைஞ்சினார்.

---

தனையளித்தோன், தம்முன்மனே, தன்குருவின் தாரம்,
மனைவிதந்த மாமி யிவர், மாதாஎன் ரோர்மனமே!

ஏவுலரை ஏவினர். காட்டை அழித்தார். எப்படி நகரை அமைப்பது? இந்த ஏக்கம் மனத்தில் எழுந்தது.

என்ன அதிசயம்! கனவில் வந்த சித்தர், நனவில் எதிர் வந்து நின்றார்.

ஆலயம், கோபுரம், மண்டபம், வீதிகள், சாலைகள் முதலியவைகளை, இன்ன இன்ன இடத்தில், இவைகளில் உள்ளபடி அமைத்து, வழிபாட்டு முறைகளை வகுத்து வை என்று, ஆகம நூற்கள், சிற்ப நூற்களை அளித்தார் தீடீரெனறு மறைந்தார்.

அரசரும் பிறரும் அதிசயித்து வணங்கினர். நம்பர் அருளை நம்பி, ஆலயததை முதலில் அமைத்தார். வருண முறைப்படி வீதிகளை வகுத்தார். ஏரிகள், குளங்கள், கிணறுகளை எழுப்பினர்.

விமலர் திருச்சடை மினனியது. சடையி லிருந்த புதுமதி அமுதம் பொங்கியது. சிந்திய திவலைகள், பரவி எங்கும் படர்ந்தன. சினமயத திருவடி சார்நதவர் சிவமாவது போல், மதுர அமுதம் பரவிய அப்பதி, மதுரை எனும் பெயர் எய்தியது.

இடர் பல தவிர்த்தார்

அருளாளர் பலர், மதுரையில் அவதரித்தனர். எங்கும் இறை வழிபாடு எழுந்தது. அதனால, வளம் பல எங்கும் வளர்ந்தன. போக தாக மருளான பொன்னுலக வாழ்வை நிந்தித்தல்; சிவனர் அருளைச் சிநதித்தல; இஃது, அப் பதிவாழ் மக்கள் மனநிலை.

இந்திரன் இதனை அறிநதான். இறுமாந்து எழுந்தான். மதுரையை அழித்து விடுஙகள் எனறு, எடுபபான மேகங்களை ஏவினன். அல்லோல கல்லோலமாக, இடியும் மினன

---

உற்றதொழில் செய்வார்க் கொருநாளும் பஞ்சமிரா;
பற்றிஜபம் கொள்வார்க்குப், பாவமெனறும் இல்லையுரோ.

லும் எழுந்தன. பெய்த பெருமழை கண்டு, அஞ்சி மக்கள் அலறினர்.

இறைவர் முடிமேல் இருக்கும் கங்கையில், ஏராளமான மேகங்கள். அவைகளுள், நான்கு மேகங்களை நம்பர் ஏவினர். விண்ணில் அவைகள் விரைந்தன. விரிவான நான்கு மாட கூடங்கள் போல் விளங்கின. படபடத்த மழை நீரைப பருகின.

அது கண்ட அமரர் தலைவன் அஞ்சினன. ஓடி விண்ணில ஒளிததான். நீடிதத மழையும் நின்றது. சிவ முகில்கள், சிவனார் திருமுடியில் சேர்ந்தன. அசசம் அகனற அனைவரும், ஆண்டவனை ஆராதித்தனர். அன்று முதல் அப்பதி, நான் மாடக் கூடல் என, அரியதொரு நாமத்தை அடைந்தது.

மாறி ஆடினர்

பாவலர் ஒருவர், பாண்டி நாட்டிற்கு வந்தார். பாண்டியர் இராஜ சேகரரைப பாாத்தார். எங்கள் நாடு, சோழ நாடு என்றார்.

அப்படியா ! சோழ மன்னர் சுகமா எனறார் பாணடியர்.

எக்குறையும் அவர்க்கு இல்லை. அவர் 64 கலைகளையும் அறிந்தவர். 63 கலைகளை நீா அறிந்தவர். பரத கலையில் உமக்குப பழக்கம் இல்லை. எனவே, எஙகள அரசர், உம்மை விட ஏற்றம்பெற்றவர் எனறார். சீசசி, எனன மோசமானபேசசு!

மனனர் இராஜ சேகரர், அது கேடடு வருந்தினா. உள்ளதைத் தைரியமாக உரைத்தார் எனறு, ஓரளவு மனம் அமைதி கொணடது. அரிய சனமானம் அளித்தார்; அவரை வழிக்கூட்டி அனுப்பினார்.

பரத கலையை, முதிர்ந்த வயதில் முயன்று பயின்றார் தெளிவு மிகுந்து அதில் தேறினார்.

ஸ்ரீமீனாட்சி திருமணத்தில், புலிக்கால் முனிவரும், பாம்புக் காலரும் விரும்பி அனபொடு விண்ணப்பித்தபடி, வெள்ளி

---

மோனமுறு வாழ்க்கையர்க்குள, மோது கலகமிலை;
வானம்போல ஞானிகள்தாம், வாழப் பிறநதவரே.

யம்பலம் மதுரையில் விளங்கியது. அங்குள ஆநந்தக் கூத் தரை, அன்பு வெள்ளம் கரை புரள, பாண்டியர், சிந்தை மகிழ்ந்து நாளும் சேவிப்பவர்.

மற்றவர் கண்கட்கு, அது சிலாரூபம்; பாண்டியர் பக்திக்கு, அது தெய்வமே யான திருவுருவம்.

ஒரு நாள் வழிபாட்டில், மன்னர் ஊன்றி இறை திரு வுருவை உணர்ந்தார்.

மானின் துள்ளலும், மயிலின சாயலும் வெளிப்பட, அங்க மெலாம் பல நுட்பங் காட்டி ஆட, பாதம் இரண்டும் ஊன்றிப் பரதம் பயினற நமக்கு, எவ்வளவு சிரமமாக இருந்தது? அநாதி காலம் தொட்டு, எம்பெருமான் ஆடுகின்றுரே! என்று எண்ணும்போது அவர் இதயம் பதைத்தது.

ஒருகால் தூக்கினீர்! ஓயாது ஆடுகிறீர்! நோகாதா? தாள் நோகாதா? ஆட்டம் நின்ருல், அகில சராசரமும் அழிந்து விடும்: அதனை அடியேன் அறிவேன். ஊன்றிய திருவடியை உயர்த்தும்! உயர்த்திய திருவடியை ஊனறி ஆடும். உமாபதே! எனறு, கலகல கண்ணீர் பெருககிக கதறினர்.

அதை யறிந்த வெள்ளி யம்பலர், காவலர் விரும்பியபடி, கால் மாறி ஆடும் கற்பகம் ஆயினர். அது கண்டு, பூமாரி சொரிந்தது பொனனுலகம். கண்மாரி பொழிந்தார் காவலர்

"ஏராரு மாட கூட மதுரையில
மீதேறி மாறி யாடும் இறையவர்"

என்று, புளகிதம் எய்தி அனபர்கள் போற்றிப் புகழ்ந்தனர்.

## தனிப்பொருள் தந்தார்.

சண்பக பாண்டியர், ஒரு நாள் சங்கப் புலவர்களைச் சந்திததார். பொருள அலலவற்றைப், பொருள் என்று உணர்வது மருள். வீணான அம்மருள் விலக, இன்பப் பொருள் இலக்கணத்தை இயற்றுங்கள் எனறு வேண்டினர்.

---

திருவிலதேல சங்கடந்தான்; தெயவவளச் செய்யாள்
மருவினளேல், வாழ்க்கை மணம்கமழும் நிச்சயமே.

"அரசே !, மண், பெண் பொனனைத்தான், பொருள் என்று மதித்துளது நம் மனம். அது மருள்தான். மெய்பபொருளை, மெய்ப் பொருள்தான அறிவிக்க வேண்டும் என்று, பாவலர்கள் பதில் கூறினர்.

வேந்தர், சிறந்த புலவர்களுடன் சென்ருர். முதல்வன் திருமுன முறையிடடார். சுந்தரேசர், வாழ்விக்கும் சுவடி ஒன்றை, பலி பீடத்தில வைத்தார்.

காவலர் முதலினேர் கண்டனர். மகிழ்ந்தனர். எடுத்தனர். படிததனர்.

"அன்பின ஐந்திணைக் களவெனப் படுவது,
அநதணர் அருமறை மன்றல எட்டினுள்,
கந்தருவ வழககம் எனமஞர் புலவர்"

என்பது முதலாக, 60 சூத்திரங்களா யிருந்தது அந்த அருள் நூல். சிவ ஜீவ சம்பந்தம், அந்நூற் பொருள். அப்பொருளை யடைவது, வாழ்க்கையின் குறிக்கோள. அந்தணர் வகுத்த எண்வகை மணத்துள், இது களவு மணம். சொற பிரபஞ்ச, பொருட் பிரபஞ்ச சூழ்நிலை கடந்து, ஆணவாதி அகன்று, அரிஷாதி தாண்டி, அந்தரங்க சந்திபபு பலதரம் நடத்தி, அருணிழல் எய்தி, சாநதி மகோற்சவ சால்பு காணல் எனும் நுட்பஙகளை, காந்தர்வம் எனும் பெயரால, ரூபகாலங்காரம் தோனற, ஒரு கதைபோல் போகிறது, புனித அதன போக்கு.

அகப் பொருளான அப் பாற்கடலை, கவிஞர் தம் மதி கொண்டு கடைந்தனர். எவரும், தம்தம் உரையையே ஏற்றம் என்றனர்.

மூல முதலே ! அருளாகரா! நீர் தந்த மூலத்திற்கு, உரிய உரை எந்த உரை ? அருள்க ஐயா ! என்று, அரசர் அழுது வேண்டினர்.

---

ஈட்டுதலும், பேணுதலும், எண்ணு தழிப்பதுவும்,
கோட்டமுளர் கொள்ளை கொளவதுவும், நம்விலேயே.

அன்பனே! வணிகர் வீதியில், உப்பூரி குடிகிழார் மைந்தர் ஒரு ஊமை. பெயர் உருத்ர சன்மன். பத்து வயது பாலன். முருகன் அம்சம் ஆனவன். பல உரைகளையும் அவன் முன் படித்தால், அவனே தீர்ப்பளிப்பன் என்று, ஆகாயத்தில் பிறந்தது அசரீரி.

பேசும் திறத்தர் எழுதிய உரைகட்கு, பேசாப் பிள்ளை தீர்பபளிக்குமாம்! விமலர் ஆடலே ஆடல் என்று, வேந்தரும் புலவரும் வியந்தனர். ஊமைப் பிள்ளையை விசாரித்து அறிந்தனர்.

ஒரு காலத்தில், பிரளயததால் ஒழிந்தது உலகம்! உலகம் மீட்டும் உருவான போது, மதுரைக்கு உரிய நாற்பாஙகு எல்லையை, நம்பர் திருமுடிப் பாம்பொன்று, வாயுள் வாலிட்டு வட்டமிட்டுக் காட்ட, வம்சசேகர பாண்டியர் அங்குத் தலைநகர் அமைக்க, அன்று முதல் மதுரை, ஆலவாய் எனனும் பெயரையும் எய்தியது.

*தந்தை பொருட்குத் தநயர் காப்பு.*

அந்த ஆலவாய்க் கோயிலிற்கு, ஊமைப் பிள்ளையை அழைத்து வந்தனர். ஆறுகால் பீடததில் அமர்த்தி அர்ச்சித்தனர். ஒவ்வொருவராகத் தம் உரையை ஒப்பிக்கல் ஆயினர்.

சிலர் உரையைக் கேட்டு, சிரித்தது ஊமை. சிலர் உரைக்குத், திருமேனியைச் சொரிந்து கொண்டது. பலரது விதண்டை உரைகளை வெறுத்தது. கபிலர் பரணர் உரைகளில, களிப்பைச் சில சில இடங்களில் காட்டியது.

மதுரை கணக்காயர் மகனார் நக்கீரர். அவர் உரையில் உள்ள சொற்சுவை பொருட்சுவைகளை, முழுதும் உணர்ந்து முறுவலித்தது. கரக்கம்பம் சிரக்கம்பத்தைப் பல இடத்திலும் காட்டியது.

---

தாமே புரிவினையால், தாவிவரும் இன்பதுன்பம் ;
தாமே அனுபவிக்கத் தான்வேண்டும், திண்ணமிதே.'

பொருளின் மதிப்பை உறைத்துக் காட்டிய மாற்றுரைக் கல்லாக, உருத்திர சன்மரை, உலகம் இன்றும் உணர்கிறது. மூல்முழ உட்பொருள், உரையும் உள்ளுறை. இறையனார் அகப்பொருள் என்பது அந்நூற் பெயர்.

'ஏழேழு பேர்கள் கூற வருபொருள் அதிகாரம், ஈடாய ஊமர் போல் வணிகரில் ஊடாடி, ஆலவாயில் விதி செய்த லீலா!' என்று, உணர்ந்து இவ்வரலாற்றை ஓதும் போதே, கல்லான மனமும் கரைகிறதே! விதியை விதித்தாய்! ஓம் பொருட்கு மெய் உரை செய்தாய்! தீர்ந்த உரை இது என்ற தீர்ப்பும் அளித்தாய்!

விசார தீரா! வரதர! குருநாதர! என்று, உணர்வு உனை நோக்கி விரைகிறதே!

ஆழியை ஏவி, பரிதியை மறைத்து விஜயனைக்காத்த பரந்தாமன் மருகர் நீர்! திருமகள் விலாசம் திகழ்பவர் நீர்! உணர்ந்தோம்! 'கோபால ராயனது திரு மருகோனே' என்று, கூவி உம்மைக் கும்பிடுவோம்.

வற்றாத ஜீவநதி காவிரி. முப்போகம் தருவேன. கனிவொடு மக்களைக காப்பேன என்னும் குறிப்பு வெளிப்பட, ஆர வாரித்து அலை வீசுகின்ற அந்த ஆறு, வாவிப் பாய்ந்து வளம் தருகிற ஊர் வயலூர். மருத நிலமான, இனப அத்திருப பதியில் இருக்கின்றீர்!

கொங்கு நாட்டில் உளது கோனாடு. அந்நாட்டின் நடுவில் விண்ணளாவி யுளது விராலிமலை. அக் குறிஞ்சியையும் மருதையும் இடமாக் கொண்டு, பிரமம் எனும் பெரிய பொருளான நீர், தடத்தத் திருவுருவில், பெரியோன் என்பது பெரிது தோன்ற, இனப வடிவமாக எழுந்தருளி யிருக்கின்றீர்

---

எந்தெந்த காலத்தோ செய்த இருவினைகள்,
சொந்தங்கொண டாடி, நமைச் சொக்கவைத்தல் காணீரே.

அகில அண்டங்களின் அதிபர் நீர். அதை உமது மணி மகுடங்களே அறிவிக்கின்றன. அவைகளை எவரும் தாங்க முடியாதே! அது அத்துணை பாரம்! அத்துணை மகிமை! அதனை யறிகிறேன்! அத திருமுடிகளைச் சுமந்த உமது திருமுக மலர்கள், ஆஹா என்ன அற்புதம்!

வீர மகளிரின் விலாசமாய், பயனளிக்கும் உமது திருத் தோள்கள் பன்னிரண்டு. அவைகள் செய்யும் பேரருளை, ஓத ஒருவாய் போதுவதோ?

வண்டுகள் மொய்க்காத மலர்கள் சண்பகம் என்பர். அத் தெய்வீக மலர்கள், அர்ச்சனை முறையில், அருளார் திருவடி களில் அமர்ந்து அழகு பெறுகின்றன. வேத தேவதைகள் வண்டுகளாகி, ஸ்ரீராகம் பாடி, உமது இரு தாள்களையும் இறைஞ்சியபடியே இருக்குமே!

இறையனார் அகப்பொருளில், களவு கற்பு என இரு இயல்கள் இருக்கின்றன. களவியல் விளைவிற்கு உதாரணமாக, இருமையில் ஒருமை உண்டாக்கும் அடங்காத தம் வேட் கையை, வலத்தி லிருந்து காட்டுகிறார் வள்ளியார்.

கற்பியல் தாகத்தை, இடத்தி லிருந்து தேவயானையார் எண்ண வைககிறார். அகில உலகையும் தாங்கும் அந்த ஆதார சக்திகள் இருவரும், உமது இருபுறத்தும் தழுவியுள அது தானே வளமார்ந்த அத்வைத வாழ்வு. இறையும் உயிரும் இணையும் இயலை, நினைவூட்டுகிறது அந்த நிலை.

இறையனார் அகபபொருள், சுருதி அனுபவம். வள்ளி தேவயானை சமேத வாழ்வு, பிரத்யட்சப பிரமாணம். ஊனறி இதனை உணராமல், பெற்றோர் மறறோர் உடனபாடினறி, கண்ட இடத்தில காமித்து, சுதந்தர புத்தியில் சுகிப்பது தமிழர் மதம். இதற்கு எடுத்துக் காட்டு இறையனார் அகப்பொருள்

---

காயும் விடம்கருடற் கில்லை;அது போல்,என்றும்
தூய அறிவினர்க்குத், துன்பஇன்பம் தோன்றுதே!

என்று எவரேனும் எண்ணுவரேல், பேசுவரேல்; திருவார் குமரா ! நீதான் அவர்கள் அறிவைத் திருத்த வேண்டும் !

விதி விலக்குகளை அறிவிக்கும் சட்டபுத்தகம் வேதம். அந்த நியதிகளை, எவ்வளவு பினபற்றுகிறது ஆன்மா: பாழும் ஆணவம், அதன அறிவை எப்படி யெப்படிப பாதிக்கிறது; அந்த இருள் அகல, எவ்வெவ் வகையில் முன்வந்து உயிர் முயலகிறது எனறு, பேசா உருவில் வேலும், பேசும் உருவில் மயிலும், சிறக்க ஆய்வு செய்யுமமே !

விந்து தத்துவ மயிலில் விளஙகி, எடுப்பான ஞானவேலை ஏந்தி, சத்தும் சிதத்துமான அழகிய உமது திருவுருவம், தாபம் தீந்து ஆன்மாக்களைத் தழுவிக கொள்ளுமே !

அபராதியான அடியேன, வாழ்க்கையில் விரயம் ஆகாத படி, மகுட மணி ஆறுமாமுகம், பன்னிரு திருத்தோள், இரு திருவடிகள், இருபுற தேவியருடன் மயிலேறி, வேலேந்திய மெய்ஞ்ஞான வேட்கை மேவவைககும் உமது கேசாதி பாதங களை, எனறும் அடியேன எணண அருள !

பொனனே பொருளே, விண்ணே பிறவோ வேண்டா பெருமா ! இந்தத் தியானம் ஒனறு போதும் எனறு, விநயம் மிகுந்து விண்ணப்பிததபடி.

ஓம்.

வாழ்க திருப்புகழ் வளம்

---

எரியும் கனலெதிரில், இல்லைகுளிர் என்பர்;
அரிகுணத்தர்க் கெனறும், நடுங்குமனம் உளளதுவே.

# 5. நாகனூர்

(தணிகைமணி. வ. சு. செங்கல்வராயபிள்ளை, M.A.)

(கருதுடுப்பூர் நாகனூர் அடியார்க்கும் அடியேன்)

பொத்தப்பி நாட்டில் உடுப்பூரில் இருந்த வேடர்களுக்கு அதிபதி நாகனூர். அவருடைய மனைவி தத்தை என்பவள். இவ்விருவரும் முருகவேளிடத்தும், முருகவேளின் அடியார்கள் இடத்தும் பரமபகதி பூண்டவர்கள். இவர்களுடைய பக்தி,

''வேல்மயில் துணையென்றோதி வீதியில் வருவோர்க் கெல்லாம், பால்பழம் ஏனல் மாத்தேன் பலவும் நன்கூட்டி அன்னூர், கால்களைத் தலைமேற் கொண்டு கனிவுடன் போற்றித தம்மால், எல்வன யாவும் நல்கி இனிது வாழ்ந் திருநதார் பனனுள் ''

எனவரும் சேய்த்தொண்டர் புராணப் பாடலால் விளங்கும். தமக்கு ஒரு மகவிலாக் குறையை நினைத்து இவர்கள் அடிக்கடி வருந்துவர்.

''மழலைவாய்க் குதலைத் தீஞ்சொல் மகவிலா நமது வாழ்வு
விழலினுக்கிறைத்த நீரபோல் வெற்றுவாழ் வாகுமன்றோ''

என நாகனூர் தமது மனைவியிடம் கூறி வருந்துவர். திருவருள் இயக்க, நாகனூர் 'அஞ்சேல்' என மனைவிக்குக் கூறி, அறு முகவேளைப் பரவி அவர்க்கு ஒரு கோயில் இனிது அமைத்து, அதில் அவர் திருவுருவைத் தாபித்து நாள்தோறும் வழிபட்டு வருவாராயினர்.

---

வருகொடியோர், புண்ணியர்போல் மாநடனம் செய்வார்
கருப்பூரம், உப்பு, வெண்மை; ஆயினும்தற் காட்டிடுமே.

" வெள்ளிமலை அத்தன விழிகுளிரு மாறுதினம்
துள்ளி விளையாடும் சுயஞ்சோதிச சுடர்க்கொழுந்தே "

"* இந்துநுதல் அம்மை இருகண் குளிரும்விதம்
சுநதரக் கூததாடும் சுயஞசோதிச் சுடர்கொழுந்தே "

" அமரர் பெருமானுக்கு ஆரும் திருவளித்த
குமரய்யா ! நீ உன் குளிர்கண்ணுற் பாராயோ "

" பெண்ணுண் அலியலாப் பிஞ்ஞகனுர் கொஞ்சவரும்
கண்ணுளா ! நீ உன கடைக்கண்ணுற் பாராயோ "

" சந்ததிகள் இல்லாச் சழக்கர் இவர்க ளென்றே
இந்த உலகோர் எமைஇகழ்ந்து கூறஉளம்
வெந்தையா எந்தையுனை வேண்டினேம் வேட்கையறக்
கந்தையா! நீ உன் கடைககண்ணுற் பாராயோ "

என்றெல்லாம் பலநாள் போற்றி இறைஞ்சினர். மயில், கிளி, கோழி இவைகளை ஐயன் கோயிலுக்கென விடுத்து, குரவைக கூத்தாட்டுவித்து, ஏழை எமது குறை தவிர்த்து ஆளுக" எனத் தொழுது வணங்கினர்.

" வாரணச் சேவலோடும் வரிமயிற் குலஙகள விட்டுத்
தோரண மணிகள் தூக்கிச் சுரும்பணி கதம்பம் நாற்றிப
போரணி நெடுவேலோற்குப புகழ்பரி குரவை தூங்கப்
பேரணங காடல் செய்து பெருவிழா எடுத்துப் "
போற்றினர். 'அயிலுடைத தடக்கை வென்றி
அண்ணலார் அருளினுலே' தத்தை கருவுற்ருள்.

---

* பெரிய புராணம் கணணபபர் 11.

---

சீலமிலார் ஏதேதோ செபபிடினும், உததமர்கள்
காலம் இடமுணர்ந்து, வாய்திறவார கண்டாமே.

ஒரு ஆண்மகவு ஈன்ருள். அக் குழந்தையை எடுக்கும் போது அது திண்ணெனும் வன்மையுடன் இருந்த காரணத்தால் அக் குழந்தைக்குத் 'திண்ணன்' எனப் பெயர் சூட்டினர் இந்தத் திண்ணரே வளர்ந்து வேட்டைக்குச் சென்றபொழுது காளத்தி மலையில் சிவபெருமானது திருவுருவைக் கண்டு தம் வசம் இழந்து, அப் பெருமானது கண்ணிற் குருதி வருவதைக் கணடு, 'இதறகு அஞ்சேன், மருந்து கைகண்டேன்' என்று கூறித் தமது கண்ணையே அம்பால் இடந்து பெருமானுக்கு அப்பிச் சாத்தின காரணத்தால, 'கண்ணப்பர்' எனப் பெயர் பெற்றனர். "கண்ணப்ப ஞெப்பதோர் அனபின்மை கண்டபின" என மணிவாசகப பெருமாஞர் சிறப்பிக்கப் பட்ட சிறபபினர் இவர். ஆறு நாளில சிவபிரானது தாள் நிழலைச சேர்நத செல்வராம் இக் கண்ணப்பரை மகவாகப் பெற்ற நாகஞரது பெருமை சொல்லும் தரதததோ ?

"மைநதர்வங் ததையும் மைநதர் வாழ்வு பெற்றதைய்ம் எண்ணிச, சிந்தையில உவகை தூஙகச சில பகல் உலகில் வாழ்ந்து, சுந்தரக கந்தலோகத் தொண்டர்கள் எதிர் அழைப்ப" நாகஞரும், தந்தையாரும் கநதவேளின திருவடி நீழலை அடைந்தனர். இவ்வரலாற்ருல கண்ணப்ப நாயஞரின் தந்தை நாகஞர் முருகவேளின் பழந்தொண்டர் என்பது நன்கு விளங்கும்.

நாகஞர் நாயஞர் வரலாறு முற்றும்.

---

வெற்ருேசை வெங்கலம்போல் ஆகாமல், செம்பொன்போல், முற்றுணர்ந்தோர், பேசாமல் முன்மோனம் கொள்வாரே.

# முறையோ, முறையோ

(கி. வா. ஜகந்நாதன்)

நம்முடைய வாழ்க்கையில ஏது செய்தாலும் அடிப் படையான குறிக்கோளாக இறைவன திருவடியை வைததுக கொள்ள வேண்டும். நாம் அவ்வபபோது கொளளும் லட்சியம் மாறிக்கொண்டே வரலாம். எந்தக் காலத்திலும் மாறுமல நமக் குத் துணையாக நிற்பது இறைவன் திருவடி. அதுவே ஞான மாக இருக்கும்; அதுவே பிறகு முததியாகவும் இருககும். அதனையே நம்முடைய லட்சியப பொருளாக வைததுக் கொணடால எதற்கும் அஞ்சாத நிலை வரும்.

இறைவனுடைய அன்பர்கள அவனைப் பலவாறு வழி படுகிறார்கள். அவனுடைய அடியையே தம் குறிககோளாக வைத்தே எலலா முயற்சிகளும் செயகிறார்கள. அதனால்தான் அவர்களுக்கு அடியார்கள் என்ற பெயர் வந்தது. இறைவ னுடைய பெருமையை உணர்நது அவன் அடியிற் புகல புகுவதே அறிவின பயன்.

"கறறதனால் ஆய பயன என்கொல் வாலறிவன்
நறறாள தொழாஅர் எனின"

என்பது திருக்குறள்.

அறிவுக்கு அழகு ஆண்டவன் திருவடிபற்றி வாழ்தல். அந்த லட்சியம் இல்லாதவர்கள் வேறு வகையில் அறிவு படைததிருந்தாலும் அவர்கள் அறியாதவர்களே. அவர்கள் வாழ்க்கை வீணாகிவிடும். பயனின்றி அடியோடு கெட்டு விடும்.

"இத்தகைய முடிவு எனக்கு வரலாமா?"

என்று கேட்கிறார் அருணகிரிநாதர்.

அடியைக் குறியாது
அறியா மையினால்
முடியக் கெடவோ?

---

அததிப்பூ, வெண்காக்கை, மீனகால், கேடருளம்,
இத்தரையில் கண்டறிந்தார், இன்றுவரை இல்லையரோ.

அருமையாகப் பெற்ற எல்லாவற்றையும் வீணடிப்பதற்கு அறியாமை காரணம். இறைவன் அடியை லட்சியமாக்கிக் கொள்ளாமல் இருப்பதே பெரிய அறியாமை. அதனால் வருவது கேடு. வாழ்வு போலத் தோற்றினாலும் இறுதியில் கேடாக முடியும்.

"இந்த நிலையில் என்னை வைத்து விட்டாயே?
இது நியாயமா?"

என்று முறையிடுகிறார் அருணகிரியார்.

அடியைக் குறியாது அறியா மையினால்
முடியக் கெடவோ? முறையோ! முறையோ!

இந்த முறையீட்டை முருகனிடம் செய்து கொள்கிறார் முனிவர். "நீ ஞானத்தையே வேலாகக் கைக்கொண்டிருப்பவன். உன்னை எண்ணி அறிவுடையவனாக வாழ்வதுதான் முறை. அப்படியின்றி அறியாமையினால் நான் கெடுகிறேனே!" என்று எண்ணினவர்,

வடிவிக் ரமவேல் மகிபா!

என்று விளிக்கிறார். 'கூர்மையான வெற்றிவேலை ஏந்திய பெருமானே!' என்கிறார். தம்மிடத்தில் உள்ள அறியாமையைச் சொல்லும்போது ஆண்டவன் கையிலுள்ள ஞானசக்தி நினைவுக்கு வருகிறது. அறியாமைக்கு மாற்று அறிவு அல்லது ஞானம். குறிக்கோள் இன்னது என்று அறியாமல் வாழ்வை வீணாக்குபவனுக்கு ஞான பண்டிதசாமியாகிய வடிவேற் பெருமான் அறிவை அருளுவான். அதற்கு அடையாளமாகவே அவன் ஞானசக்தியை ஏந்தி யிருக்கிறான்.

அறியாதவரையும் அறிவுள்ளவராக்கும் பெருங்கருணை பூண்டவன் அவன். இதனைப் புலப்படுத்தும் திருவிளையாடலை அடுத்தபடி அருணை முனிவர் நினைவு கூர்கிறார். குறவர்ணர் குன்றில் குறவர் மகளாக இருந்து வாழ்ந்து வந்தாள் வள்ளி நாயகி. அந்தப் பெருமாட்டி, தான் திருமால் மகள் என்பதை அறியாமல் இருந்தாள் முருகனே தனக்குரிய மணிவாளன் என்று தெளிவும் இல்லை. அறியாமையில் மூழ்கிக் கிடந்தாள். மேகத்தோடு ஒட்டிநிற்கும் மின்னல் தனியே நிலத்தில் கிடக்

பத்தியினால் முத்தியுறும், புண்ணியத்தால் பத்தியுறும்;
வித்துவினை யால்பிறவி, வேகங்கொண் டேயுறுமே.

குமாரீ அப்படிக்கிடந்தால் அது இயற்கையன்று. வள்ளி நாயகி வானிலிருந்து கீழேவிழுந்த மின்னுக்கொடிபோல இருந்தாள். அந்தக் குறமின்கொடியை மீட்டும் வானத்தில ஏற்றி அதற் குரிய இடததில் வைக்கவேண்டும் என்று ஆண்டவன் எண்ணினை.

தன் பெருமையையும் தான் எதைக் குறிக்கோளாகக் கொள்ள வேண்டும் எனபதையும அறியாமற் கிடந்த வள்ளி நாயகியை முருகனே வலியவந்து ஆட்கொண்டான். கற்பகம் போல் வந்து தனமேல் அந்த மின்னுக்கொடியைப் படர விட்டுக் கொண்டான்.

அவன குணங்களால் உயர்ந்தவன் ; குணமலை.

இவற்றை யெல்லாம் நினைந்து முருகனை விளிக்கிறர்.

> வடிவிக் ரமவேல் மகிபா, குறமின்
> கொடியைப் புணரும் குணபூ தரனே !

'ஞானசக்திதரனுக நீ இருக்கிறய ; அறியாதவரையும் தடுத்தாட்கொண டருளுகிருய். அத்தகைய உன்னை அணுகும் என்னைக் குறிககோளிலாமல் எல்லாவற்றைம் விளுக்கும்படி செய்து முற்றும் கெடும்படி ஆக்குவது முறையா ?" என்று வேசாறுகிருர் அருணகிரிநாதர்.

> அடியைக் குறியாது அறியா மையினுல்
> முடியக் கெடவோ ? முறையோ ! முறையோ !
> வடிவிக் ரமவேல் மகிபா, குறமின்
> கொடியைப் புணரும் குணபூ தரனே.

[நின்னுடைய திருவடியை லட்சியமாகக் கொளளாமல் அஞ்ஞானததில முற்றும் நான கெட்டுப் போவது சரியா ? இது முறையா, நியாயமா? கூர்மையான வெற்றி வேலையுடைய பெருமானே, மின்னுக் கொடிபோன்ற குறககுல வளளியைச சேர்ந்து இன்புற்ற குணத்தில் மலையைப் போன்றவனே.

முடிய - முற்றும். வடி - கூர்மை. விக்கிரமம் - வெற்றி. மகிபன - மன்னன ; கலைவன. பூதரம் - மலை.]

முருகன் திருவடியையே பரம லட்சியமாகக் கொண்டு வாழ வேண்டுமெனபது கருத்து.

இது கந்தர் அநுபூதியில 23-ஆவது பாடல்.

## தாயின் பிழையும் தற்பரி அருளும்

[ குகஸ்ரீ ]

பரிதி தேவர்கள் பன்னிருவர். அவர்களுள் ஒருவர் விவஸ்வான். மதிநலம மிக்க அவர்கசு, ஒரு மைந்தா. அவர் பெயர் வைவஸ்வத மனு. சிறந்த அவர் துணைவியின பெயர் சிரத்தை. சிவ பக்தியில் மனு சிறநதவர். சிவையை வழி படுபவள் சிரததை. இருவர் பக்திககும ஈடுகாட்ட, இந்த உலகில எவரும் இல்லை. இத் தம்பதிகட்கு, வாழககையில் எலலா நிறையும் இருந்தது; இல்லை பிள்ளை என்ற ஒரு குறை யும் இருந்தது.

அரசே! தீராத உன் வேட்கையை, மகப்பேற்று வேள்வி தீர்த்துவிடும். நாளையே நல்ல நாள் அதற்கு ஆவன செய்! என்று, குல குருவான அருந்தவ வசிட்டர் அறிவித்தார். அதன் படியே, அரிய வேள்வி ஆரம்பிக்கப பெற்றது.

பிறக்கும் ஒரு பிளளை. அவனே எதிர்கால அரசன். இனி, பெருமித திருவும் பெருகலுறும்; வழிவழி சந்ததி வளர்தலுறும் எனறு, மகிழ்கிறது மனனர் மனம்.

நடுவரா யிருந்து, வேள்வியை ஒரு ரித்விக்கு நடததுகிறார். சாந்தரான அவரை, சிரத்தை சந்திததாள. கை குவித்தாள். கண்ணீர் வடித்தாள. அதுகண்ட அவர் மனம் அதிர்ந்தது. என்ன அம்மா செயதி? எனறு அலறினர்.

ஸ்வாமி! தேவதைகளை ஆவாகனம் செயபவர் தேவரீர். புனித அத் தேவதைகள, தஙகள கண்கட்குத்தான புலனவர். ஆண் மகவின்மேல, எனககு ஆசை யிலலை. பெண் மகவு தான எனக்குப் பிறக்க வேணடும். இது, என பல நாளைய எண்ணம். விததகத் தேவதைகளிடம், என சார்பில் இதை விணணபபியுஙகள்! அரசர் இதை அறிய வேண்டாம். ஓமம் வளாககும உரியவர்கட்கும், இதை உணர்த்துஙகள் என்று, விழுந்து வணங்கி வேணடினள.

---

தக்கவர்கள் இன்றித் தனித்துண்ணல, தானுகவர் மீன
மொக்குகின்ற கொக்கான முற்பிறபபின வாசனையே.

காரிகையர் கண்ணீர், எத்தகைய காரியத்தையும் சாதிக்கும். கோதையின் நிலை கண்டு, ' நிதிக்கு ' குழம்பினார்: அஞ்சவேண்டாம் அம்மா! அப்படியே செய்கிறேன் ' என்று ஆறுதல் கூறினார்.

நலந்தரு வேள்வி, அக் குறிப்பின்படி நடந்து கொண்டே இருக்கிறது.

* * * * *

பத்து மாதம் சுமக்கின்றாள், நீராட்டி, சீராட்டி, பாலூட்டி, தாலாட்டி, கண்ணுறங்காது இரவும் பகலும் காக்கின்றாள். தீஞ்சுவை யென்று எதையும் தின்றால், பாலனை நோய் பாதிக்குமோ என்று அஞ்சி, தன் வாயைக் கட்டி, வயிற்றைக் கட்டி வளர்க்கின்றாள். பருவம் வந்தபின், மங்கை ஒருத்தியை மணம் செய்து வைக்கின்றாள்.

ஆரம்பம், தாய்க் காப்பு. அடுத்தது, தாரத்தின் ஆதரம். இங்ஙனம் எல்லாம், ஆணின வாழ்விற்கு மாதர் காரணர். மாக்கள் ஆகாமல், எவரும் மக்களாய் வாழ, அரிவையர் இல்லாமல் முடியாதே! ' இல்லாள் அகத்திருக்க இல்லாதது ஒன்றில்லை '. ' பாழே மடக்கொடி யில்லா மனை ' எனும் பழமொழிகள், அந்த உண்மையைத் தானே அறிவிக்கின்றன.

நிலமகள், நீர்மகள், அலைமகள், கலைமகள், மலைமகள் துணை யில்லையேல், மண் விண் வாழ்வனைத்தும் மடங்கிவிடும். ' அவளால வந்த ஆக்கம் இவ் வாழ்க்கை யெல்லாம் ' என்னும் ஆன்றோர் அறிவிப்பை, அறியாதார் எதுவுமே அறியாதார்.

அரசர், ஆண் மகவை அவாவுகிறார். அவனியை ஆள, ஆண்பிள்ளை வேண்டும் என்பது அவர் எண்ணம். ஏன், அரிவையர் ஆள்வது இயலாதா? அம்பிகே! அடியேன் எண்ணம் நிறைவேற, அருள்க தாயே! என்று, அனுதினமும் சிந்தித்துக் கொண்டு இருந்தவள் சிரத்தை. அவள் எண்ணம், இப்போது கைகூடும் போல இருக்கிறது. அரசர் நினைவு அப்படி; அரசி சிந்தனை இப்படி.

ஆணும் பெண்ணும், பாலும் சுவையும் போல்பவர். ஏற்றத் தாழ்வை எண்ணுதல் ஆகா. கருத்து ஒருமித்த கடமை

---

எங்கும் பரிதிகதி எனறாலும், காந்தத்தில்
பொங்கொளிபோல, ஞானிகளில் தெய்வப் பொலிவுறுமே.

முக்கியம். சிறந்த நிறை யுடையவள் சிரத்தை. மேலும் தேவி பக்தை. கணவர் கருத்திற்கு மாருக, இத்தகைய சிந்தனை அவட்கு எப்படி உதித்தது? அட பாவமே!

* * * * * * *

நீடித்த வேள்வி, ஒருவாறு நிறைவடைந்தது. அதன் பயனாக, சிரத்தா தேவி கருப்பம் எய்தினள். பத்தாம் திங்கள் வந்தது. பிரசவ சிரமம் நிகழ்ந்தது. குழந்தை பிறந்தது. குழலிசை யெழுந்தது.

விவரம் அறிந்த மனு விரைந்தார். நீராடினார். இது, சசேல ஸ்நானம் எனப்பெறும். அதன்பின், சேய முகத்தில் விழிக்கும் சடங்கு.

ஒரு வட்டில். அதில் ஒரு பட்டு. அதன்மேல் சேய். காரிகையர் பலர், மகவைக் காட்டினர்.

ஆ! பெண்மகவா? அரசர் அலறினர். அரசி கண்க ளில் ஆநந்த மழை. மன்னர் விழிகளில் துன்ப மழை,

அந்தணர்கள் ஜாதகத்தை ஆய்ந்தனர்; இளை என்ற பெயரை யிட்டனர். அன்பொடு ஆசி கூறினர். நல்ல தானம் ஆதிய நடந்தன.

* * * * * * * *

பார்த்திபர் மனம் படபடத்தது. விரைந்தார். வசிட்டர் ஆஸ்ரமத்திற்கு வந்தார். வைவஸ்வதா! வா அப்பா! என்ற அவர் முன், பொருமிக் குமுறினர் பூபதி.

ஸ்வாமி! புதல்வனை விரும்பினேன; புதல்வி பிறந்தாள். வேள்வியில் ஏதேனும் விபரீதம் விளைந்ததா? எனனைப் பொறுத்தவரை, எபபிழையும் செய்திலன் என்று, அதிர்ந்த மனத்தோடு அலறினர் அரசர்.

அப்படியா செயதி, என்று, உள்முகம் ஆயினர் வசிட்டர். பிறகு கலங்கிய மனத்தொடு கண் திறந்தார். பார்த்திப! வருநதிப் பயனில்லை. மகளே வேண்டும் என்று, சிரத்தை, மதித்தாள். அவள் சிந்தனை யறிந்து, ரித்விக்கு செயல் செய்துளர், விதியும் இடைப் புகுந்து விளையாடி யிருக்கிறது.

---

காயம் நிலையல்ல, காண்இமையோர் ஆயிடினும்;
ஆயவுடல், ஆன்ம அருந்தவத்திற் குத்துணையே.

இயற்கையை மாற்ற இறைவனால்தான் இயலும். அசிரத்தையை விடு! காமேஸ்வரனை, வாழ்விக்கும் ஸ்ரீ பஞ்சாட்சரியால் வழிபடு! நியாயம் எதுவோ அது நிறைவேறும். அலமரும் உன் மனமும் அமைதி பெறும். இகமோ பரமோ சித்திக்க, இதற்கு அயலாக வழியில்லை. வீணாக நேரத்தை விரயம் செய்யாதே! ம். புறப்படு! என்றார்.

அவர் கட்டளைப்படி, வேந்தர் விரைந்தார். புனித பூஜை அறையுள் புகுந்தார். தான் ஒரு மன்னன் என்பதை மறந்தார்; விரத சீலராய் விளங்கினார். உக்ரங் கொண்டு, ஸ்ரீ பஞ்சாட்சரியை உருவேற்றத் தொடங்கினார். நாள்கள் பல இடையில் நடந்தன. குமுறிச சித்கனல் கொப்புளித்தது. ஆதன மூலம், இறைவர் திருவுளம் இறங்கியது.

விழி! எழு!! பார்!!! அங்குப் போ என்று, யாரோ அறிவிப்பது போல இருந்தது. விழித்தார்.

அந்தப்புரத்தில், ஒரே ஆரவாரம். என்ன அது? என்று எழுந்தார்.

மகராஜா! மகராஜா!! என்று, ஏக குரல்கள் எழுந்தன. ஓடிவந்தார் வேந்தர்.

மகளா யிருந்த குழந்தை, ஆண் மகவாக மாறிவிட்டது அரசே! மாறிவிட்டது! என்று, பணிமாதர்கள் தம் பரிவு காட்டினர்.

காவலர் விரைந்தார். பிள்ளையைக் கண்டார். வித்தகத திருவருளை வியந்தார்.

பிராணபதீ! என்ன விபரீதம் இது? அரசி அழுதாள் சிவானுக்ரகம் என்று, மன்னர் சிரித்தார்.

வசிட்டர், அதே சமயம வந்தார். மகிழ்ந்தது அவர் மனம். பிள்ளைக்கு, ஸுத்யும்நன் என்று பெயரிட்டார். ஜாதகம் முதலிய சம்ஸ்காரங்களைச் செய்தார். அதன்பின் அமைதியை ஆவலித்து, தீர்த்த யாத்திரை சென்றார்.

---

இந்த நிலையுணரா(து,) இன்பமென்றும், வாழ்க்கைநிலை சொந்தமென்றும், பல்இளித்துச் சொக்குவது நல்லறிவோ?

...ஞானத்யும்னன் வளர்ந்தான். தெளிவு தரும் நூல்களில் தேறினான், வில்லாதி வில்லன். வீராதி வீரன் என்று, போற்றி உலகம் அவனைப் புகழ்ந்தது.

சிரத்தாதேவி, மகனைக் காணும்போதெல்லாம் சிரித்தாள். *எண்ணத்தில் மண் விழுந்ததே என்று,* அதே நேரத்தில் அவள் இதயம் அழுதது. தந்தைக்கு ஒரு மனநிலை. தாய்க்கு ஒரு சிந்தனை. மாறுபட்ட இவ்விருவர் நடுவில், மகன். *ஐயோ! என்ன மோசமான சூழ்நிலை!*

பாலனான பருவம். குமரனான வயது. இப்போது கோலமான தருணம். இனி சும்மா இருக்க முடியுமா? பல சமயம், காடுகட்கு, வேட்டை என்று சென்றான். வெற்றி கொண்டு மீண்டான்.

* * * * * * * * *

மேருவின் அடிவாரம் தாருவனம். ஒருநாள், எடுப்பான குதிரைமேல் ஏறி, புதிய அவ்வனத்துள் புகுந்தான். படபடக்கும் மின்சாரம் பாய்ந்ததுபோல், ஏதோ ஒரு விறுவிறுப்பு உடலில் விளைந்தது. என்ன இது? என்று எண்ணினான். ஏறியிருந்த குதிரையி லிருந்து இறங்கினான்.

*இயற்கையின் அமானுஷ்ய சக்தியை,* என்னவென்று சொல்வது? ஆணாயிருந்த குதிரை பெண்ணாக, மங்கையாகத் தன்னுடலும் மாறியதை அறிந்தான்.

அடடா! கனவா நனவா காண்பது நான்? என்று கதறினான். அதிர்ந்தது மனம். ஆடியது உடல். சொற்கள் குழறின. சுழன்று விழுந்தான்.

அச்சம் அதிகரித்தது. மடப்பம் மலிந்தது. தோன்றியது நாணம். நடுக்கம் தொடர்ந்தது. காரணம் அறிய முடியாமல் கலங்கினான். இந்த உருவில், நகர்க்கு எப்படிப் போவது? ஒன்றுமே தோன்றவில்லையே!

பகல் போயது. இரவு வந்தது. கடும்பசி காதடைத்தது. காய் கனி பறித்தான். உண்டான். கடும் இளைப்பு கண்ணை மறைத்தது. ஒரு மரத்தடியில் படுத்தான். மெய்ம்மறந்து

---

அரசிலைநீர் போலுடல்வீழ் முன்னம், அமலன்
திருவடியைப் பூசித்துத், தேர்வுபெறல் நன்றன்றோ.

கூற்றினான். அஞ்சிய குதிரை, மனம் போன வழியே சென்று மறைந்தது.

ஸுத்யும்நன், வைகறையில் எழுந்தான். கடனை முடித்தான். எதிரில் இருந்த பொய்கையில் இறங்கினான். தனது நிழலைத் தண்ணீரில் கண்டான். மானத்தால் மனம் குன்றினான். நீராடினான. ஈர உடையை, உலர்த்தி உடுத்தான. விதியை நொந்தான. வேதனை யடைந்தான. அந்த நாள் செய்தி இது.

அடுத்த நாள், பெண்மை தந்த வனத்தை வெறுத்தான. அடுத்த காட்டை அடைந்தான். அங்கு ஆஸ்ரமம் ஒன்று அமைத்தான.

ஆண் உடையை வீசி எறிந்தான். மரவுரியாலும், தழைகளாலும் உடலை மறைத்தான். நடுங்கி நடந்தான். கண்ணீரால், தழைகள நனைந்தன.

தந்தையும் தாயும், மைந்தனைக் காணாது வருந்தினர். பரிஜனங்கள், நாடு காடெல்லாம் தேடினர். அவர்களுள் இரண்டொருவர், காட்டில் இருந்த அவனைக் கண்டனர். யாரோ பெண்பால் என்று எண்ணினர். அசட்டை செய்து போயினர். அவனும் தன்னை அறிவிக்க நாணினன். இரண்டொரு ஆண்டுகள், இடையில் உருண்டு எப்படியோ ஓடின.

* * * *

தருக்கள் முழுதும் தளிர்கள். மணம் கமழும் மலர்கள். உவகை தரும் காய் கனிகள, கொத்துக் கொத்தாய், ஒவ்வொரு மரத்திலும் ஊசல ஆடுகின்றன. குயில்கள் கூவின. மயில்கள் ஆடின. தென்றல் தேர் ஏறி, வசந்த காலம் வந்தது.

மாலை வேளை. வில் ஏந்திய தோளன். கணை பிடித்த கையின. எடுப்பான மார்பன். காமனும் நாணும் கட்டழகன் ஒருவன், அரண்யத்தில் வேட்டை யாடி, அயர்ந்த நிலையில் வந்தான.

ஒரு மரத்தடியில், தனியிருந்தாள் ஸுத்யும்ந தையல். *வந்தவன் கண்டான் ; யார் இவள் ? என்று, அடிமுதல் முடி* வரை அதிசயித்து நோக்கினான. வாரி விழுங்குவான்போல்

---

வீணும் அசத்தியம், சத்தியத்தை வெல்லாது ;
மாறாத கோபம், பொறுமைமுனர் மாய்ந்துறுமே.

பார்க்கும் அவனேடி வனிதையும் வியந்து நோக்கினள். கண்கள் இரண்டும் கலந்தன. இருவர் உடலிலும், ஏதோ ஒரு உணர்வு விறு விறு என்று புகுந்து விளையாடியது. குலமறியார், குணமறியார். எதிர்பாராத சந்திப்பு. காலம் செய்யும் சதியா? அல்லது கர்மம் செய்யும் சதியா? என்னென்று சொல்வது?

மாதர் திலகமே! மான்போல் மருளும் நீ யார்? இங்குத் தனித்து இருப்பது ஏன்? என்றான் அவன்.

'நான் ஒரு அகதி. என் இளம்பருவப் பெயர் இளை என்று, தலை குனிந்து கூறினள் அத்தையல.

நான் மதிமகன். என் பெயர் புதன். இதுவரை என் மனம், எதையும் கண்டு மயங்கியது இல்லை. ஊழின் வலியோ? உன்னைக் கண்டதும், தாளமிட்டு உள்ளம் தடுமாறுகிறதே!

வீரர் திலகமே! இங்கும் இதே செய்திதான். இயற்கைத் தெய்வம், இனி என்னென்ன செய்ய எண்ணி யுளதோ? என்று, முன்னும் பின்னும், அவள் எண்ணி உரைத்தாள்.

கண்ணும் மனமும் கலந்தன. அதன் பின், வாயில் பேச்சு வரவில்லை. தம் வசம் இழந்தனர். பரவசம் எய்தினர்.

* * * *

ஒரு ஆண்டு என்ற பெயர் கொண்டு, காலச் சக்கரம் உருண்டது. காரிகை கருப்பம் எய்தினள். பிள்ளை காலத்தில் பிறந்தது. புதன், தன் மைந்தனுக்குப் புரூரவன் என்று பெயரிட்டான். இடையில் ஆறு திங்கள் ஆயின.

ஒரு நாள் புதன், இளை! உனக்கும் எனக்கும் தொடர்பு தந்த ஊழ், பிள்ளை பிறந்தபின் பிரிவை நினைத்தது. தெய்வமே துணை. வேறு வழியில்லை. ஒன்பது கோளகளுள், நான் ஒருவன் என்றான். மாபெரும் அவன் உருவம், அவ்வளவில் எங்கோ சென்று மறைந்தது.

உலகமே சுழலவதுபோல், உணர்கிறது உள்ளம். சிறிது நேரம் அமைதி. அதன்பின், இயற்கையின் விசித்திரத்தை ஸுத்யும்நன் எண்ண லாயினன். பெண்ணாக ஆதியில் பிறந் தேன்; என் பெயர் அப்போது இளை அடுத்து ஆணாக மாறி

---

கண்ணனமுன், அனறசுரர் காலசாய்ந்து போனதுபோல், புண்ணியத்தைப் பாவம், புறங்காண மாட்டாதே.

னேன் என்று, அரண்மனையில் சிலர் சொல்லக் கேட்டிருக்கிறேன். மாபெரும் வேட்டைக்கு வந்த இடத்தில், மங்கையாக எப்படி மாறினேன்? புதனைக் கண்டேன். பெண் புத்தி பேதலித்தது. பிள்ளை இவன், என் மூலம் பிறக்க வேண்டும்! அதற்காகத்தான விதி, அபபடி என் அறிவை மறைத்ததோ? இறந்த காலததை மறந்து விடும்படி, இயற்கை எவர்க்கும் உதவுகிறது. நிகழ்நததவைகளை எல்லாம் நினைத்தால், நெஞ்சு வெடித்து விடும்போல் இருக்கிறதே!

* * * *

வருவது வருக! வசிட்டரைச் சேவிக்கலாம்! என்று எழுந்தான், புறபபட்டான. நல்ல வேளை. தீர்த்த யாத்திரை சென்ற அவர், இப்போது திரும்பி யிருக்கிறார். அவர் திருவடிகளில், விழ்ந்து எழுந்து விம்மினான. அநியாய தன் கதையை அறிவித்தான.

ஆ! ஸீதயும்நனு நீ? தாயின் தவறான எண்ணம், தநதையின் சங்கலபத்தைத தவிடுபொடி செய்தது. அதனால், பெண்ணாகி அன்று பிறந்தாய். அதன்பின, அமலன அருளால் ஆண்மகன ஆயினை!

'ருத்ரரும் ருத்திராணியும், வளம் மிகுந்த வனத்திற்கு, ஒருதினம் வந்தனர். அணுக்கராய் இருவரும் அமாநதனர். தர்ம சூட்சுமத்தை, விரிவாக எடுத்து ருததிரர் விளககுகிறார். செவிமடுதத ருதராணி, அது குறித்த சிந்தனையில் ஆழ்நதாள்.

வாய்மை முனிவர் இருவர், அவ் வழியே வந்தனர். தனித்த இடத்தில ருத்ர தம்பதிகள். அந்நிலையில, அவர்களைப பார்பபதும் பாபம் என்று அஞ்சினர். திரும்பினர். ஓடியே போயினர்.

பெண் பொம்மைக்கு, ஒரு புடவை கட்டினால் போதும். அதைப் பார்த்துப் பல்லிளிக்கும் புதுயுக புத்திசாலிகள் பலருளர். இது ஒரு தவறு? ஏன் ஓட வேணடும்? என்று, இக் கேள்வியை அவர்கள் எழுப்புவது இயறகை.

சதிபதிகள், யாரும் அறற தனிதத இடத்தில், வாளா இருந்தாலும போதும். அநநிலையில், அவர்களைக் காண்பதும்

---

பொற்பறிவி லாத புதல்வர்களைப பெற்றோர்,தம்
முற்பிறவிச செய்வினையாம் என்றுமுகம் தொங்குவரே

பாவம் என்று அஞ்சும் மனநிலை இருந்த வரையில், வளர்ந்து நிறைந்து உலகம் வாழ்ந்தது. வாழ்நாள் பெருகி வளர்ந்தது. ஆம் மனுதர்மம் மாறிய பின்னர், எந்தக் கோணத்திலும் அமைதி யில்லையே! இதை நினைவார் இல்லாத குறையை, ஆ! யாரிடம் சொல்லி ஆறுவது?

அம்முனிவர்கள நிலை யறிந்த ருத்ராணி, நாணித் தலை குனிந்து நகைத்தாள். அவளை உவகைப படுத்த நினைத்த உருத்திரர், இவ்வனத்திற்கு எவர் வரினும் பெண்ணுவர் எனறுர். இரணடொரு நாளகளுககு முனதான், இது நிகழ்ந்தது.

அதை நீ அறியாய். வேட்டை யாட விரைந்தாய். விளை யாட்டாகச சொனன ருத்ரா வார்த்தை, விபரீதத்தை உன்னுள் வில விளைவித்தது. பெரியோர்கள் பேசும்போது, எச்சரிககை யாகப பேசவேணடும். இன்றேல, பலர்க்கு அதனுல பாதகம் விளையும். உன்னுல் உலகம் இதை உணர்நது கொள்ளும். புதன மகன புரூரவன், புததிசாலியா யிருப்பான. எதிர்கால சநதிர வம்சம, அவனுல் அதிக பயனை யடையும்.

அஃது இருக்கட்டும். தாயின சிந்தனை, தந்தையின் நினைவு இரண்டும், ஆணுககி, மீட்டும் பெண்ணுக்கி, எபபடி யெப்படி உன்னைப் பால்மாறச செயதது பார்ததாயா? அதனுல்தான், தம்பதிகள, ஒதத மனத்தொடு வாழ வேண்டும எனபது. அஃது இல்லாமையாலதான, பிறக்கும் பிள்ளைகள் எஙகும் உருப்படுவது இலலை. இதை அறிவாரும் இலலை. அறிந் தாரும் மறநதார. உலகப போக்கை உணர்நதால, எஙகள உளளம் அதிர்கிறது பரிதாபமான, இந்தக் கண்ருவிகளை யெல்லாம் பார்க்க வேண்டாம் எனறு, ஓடிப் போகிறேம். காடுகளில், மலைகளில், குகைகளில ஒளிநது கொளகிறேம். தனியிருந்து தவம்கிடந்து, பேருன சாந்தியைப் பெறுகிறேம் எல்லா முனிவர்களின வரலாறும் இதுதான. தாய தந்தை யர் தவறு, தொடர்ந்து உன்னைத் தொலலைப் படுத்துகிறது அதனுடன, முன்னைய ஊழும் முறுவலிககினறது.

---

பனறிபல குட்டியிடும், யானையொரு கனறீனும்,
எனருல், எதற்குமதிப் பென்றெவரும் ஓர்வாரே.

இவைகளை எண்ணி வருந்தி ஆவது என்? அருமை மைந்தனே, அருந்ததி இடம் கொடு. எனனோடு புறப்படு!

புனித கயிலையே எவர்க்கும் புகலிடம். அங்குச் செல்வம். அருந்தவம் செய்வம். தெய்வ சித்தமே தீர்ப்பளிக்கட்டும் எனறு ஆவேசமாக வசிட்டர் அறிவித்தார். இருவரும் கயிலையை எய்தினர். வசிட்டர், ஸுத்யும்நற்கு அருநதவ முறைகளை அறிவித்தார். ஒரு பர்லாங்கு தூரம் சென்றுர். அரிய தவத்தில ஆழ்ந்தார்.

ஸுத்யும்நன், நீராடி நியதி செய்தான். சுகாசனம் இட்டான். வடக்கு நோககினன. சிவசிவ என்று சிந்தித் தான. சிந்தையில் சிவனடி பந்தித்தான. வளரும் அன்பொடு ஒந்தித்தான. அதேமயம் ஆயினன்.

தவம் கண்டு மகிழ்ந்த தற்பரர், கணகட்குப் புலனுகக் காட்சி யாயினா. மகிழ்ந்தது மனம். கைகள் குவிந்தன.

ஸுதயும்ந! மாதாவின் சங்கற்பம், ருத்ரசாபம் இரண் டும் மாறுது. எம்மை ஏத்திய பயனுல, ஒருமாதம் ஆண்; ஒருமாதம் பெண. இனி நீ இபபடி இருபபை என்று சொல் லிக்கொண்டே, கரநதது இறைவர் திருவுருவம்.

இஃது எனன சங்கடம்! மாதந்தோறும், பால்மாறி வாழ் வதா! என்ன வேதனை! இதைவிட மாய்ந்து போவதே மேல எனறு, மதிதத்து மனம்.

மெய்பபொருள் சிவம்; அதன் அருளார் சொரூபம் அம்பிகை. அததேவியுடன் அமலன சேவை அருள்வானேல, அக்கப்போர் யாவும் அழிநதுவிடும்! வரத சிலை தனி வரினும், வளர்ந்து பெருகும் வாழ்வு என்று, இளமையில் படித்தது நினைவில் உதிததது.

தேவதேவி! சிவசாம்பவீ! அமல வடிவீ! ஆரணீ! ஜகத் காரணீ! இந்த உயிரை எடு அம்பா! இனப நின அடி நிழலில் இடு தாயே! போதும் போதும் பிறவிச் சுகம் என்று, ஓ எனறு அழுதான். எழுந்தான். உயிர்விடத துணிந்தான.

எனன அதிசயம். எங்கும் பசுமை எழுந்தது. அதன நடுவில், அபய வரத கர அம்பிகை. கனம வினை கழிக்கும்

---

உத்தமச் சேய்ஒன் றுதித்தகுடி வாழ்வடையும்
புத்தியிலாப் பல்லோர், பூமிக்குக் கேடாமே.

திருவடிகள்; கனிவுறு புன்னகை செய்யும் கமல மலர்முகம். கண்கள் பெற்ற பயன் என, அந்தக் ககன வடிவியைக் கண்டான் தொழுத கைகளை தலைமேல ஏற்றித் துதித்தான்.

அஞ்ச வேண்டா என்று, ஆறுதல் தந்தாள் அம்பிகை. எழுந்து வந்தார் வசிட்டர். மங்கல வடிவினை திருப்புகழை, வடமொழி மந்திரங்களால் வாயாரப் பாடினார்.

வசிட்டா! இவனை அழைத்துச் செல்! மந்திர மயமானது, எம் ஆக்கம் கூறும் பாகவதம். விதிமுறைப்படி, அந்த பாகவத - யக்ஞத்தை, நல்முற முன்னிருந்து நடத்திவை! சிரவணிக்கும் இவனுக்கு, எண்ணியது எல்லாம் சித்திக்கும். உலகம், இவன் மூலம உணர்ந்து கொண்ட செய்தி பல. இதை யும் அறிந்து இன்புறுக என்று, அருளி மறைந்தாள் அம்பிகை.

அன்னை யருளியபடி, வசிட்டர், ஸுத்யும்னனை அரண் மனைக்கு அழைத்துச் சென்றார். விதிமுறைப்படி, ஸ்ரீ தேவி பாகவத விரிவுரை செய்தார். விவரம் அறிந்த விவஸ்வான், பழைய தன் பிழை யுணர்ந்து வருந்திய சிரத்தை ஸ்ரீதவியோ ரும், ஸுத்யும்னனுடன் சிரவணித்தனர்.

மங்களமாகப் பாகவதம் நிறைவு பெற்றது. அன்று தேவி வழிபாடு, மாகேஸ பூஜை முதலியன, நலம்பெறு முறையில் நடந்தன.

அனைவரும் கண்டு அதிசயிக்க, ஸுத்யும்னன் ஆண்பா லாக மாறினன. அருந்தவ வசிட்டர், என்றும் இப்படியே இரு என்று, ஆசி கூறினார். தந்தையும் தாயும் சிந்தை மகிழ்ந் தனர். மன்னன ஸுத்யுமனுக்கு மகுடம் சூட்டி, யாவரும் மகிழ்ந்தனர்.

நானகு கால்களால், தருமதேவதை நடந்தது. அரிய செங்கோல் ஆட்சி நடத்திய ஸுத்யும்னன, பாலன் புரூரவ னுக்குப பட்டம் சூட்டினன். அதனபின், அம்பிகையைப் பல காலம் ஆராதித்தான். அதன பயனாக, அருளார் தேவியின் அடிநிழல் எய்தி, அமைதி யடைந்தது அவன் ஆன்மா.

ஓம்.

வாழ்க தேவி தாசர்கள்.

# மானிடர் உய்யும் வழியும் தொண்டும்

[ஆ. கி. ரங்கராஜன்]

மனிதராகப் பிறந்த வுடனேயே நாம் ஆசை எனும் வலையில் அகப்பட்டு விடுகின்றோம். பின்னர், அதினின்று மீள வகை யறியாமல் தவிக்கின்றோம். இதனால் அரிதாகிய மானிடப பிறவி எடுத்ததின் பயனை அடைய முடியாமல் போகின்றது. எனினும், பேரருள் வடிவுடைய இறைவன் இவ்வலையினின்று நாம் மீளத் திருவுளம் கொண்டவனாய், இதர பிறவிகளுக்கு இல்லாததொரு அற்புத அறிவை நமக்கு அளித்திருக்கின்றான்.

மானிட சரீரம் திடீரென அழியக் கூடியது. ஐம்பூதச் சேர்க்கையால் ஆகியது. விந்தையான உணர்ச்சிகளும் ஆற்றல்களும் உடையது. இருப்பினும் இதன் இழி நிலையை, சற்றுக் கூர்ந்து ஆராயின், நமது உள்ளம் மிகவும் வேதனையே அடையும்.

இது உதிரம், சதை, எலும்பு, தசைநார், நரம்பு, தோல் இவைகளால், ஜலமலத் துவாரங்களுட்பட (கண்கள், செவி கள், நாசி, வாய் ஆகியவற்றுடன்) ஒன்பது வாசல்களை உடையதாய் உருவாகிறது.

ஆசைகளுக்கெல்லாம் தலைவனெனப்படும் மன்மத னுடைய நாட்டிய அரங்கம் போன்றது. அதனால், இச்சைக்கு அடிமை என்ற முறிச்சீட்டு வைக்கப்பட்டு இருக்கும் பேழை யைப் போன்றது. ஆணவம், கன்மம், மாயை என்ற மும் மலங்களும் கூடிய இது, கணக்கற்ற கொடிய கிருமிகளால் சூழப்பட்டது. மேலும் துர்நாற்றமான சரக்குகளைத் தேக்கி

---

உள்ளபொருள் தன்னை, உதவுகுண நல்லோர்க்குக்
கள்ளமனம் இல்லை,அது நரங்காண் அனுபவமே.

வைத்துள்ளது. ஆதலின், இதனில் உள்ள ஜீவன் பிரிந்தால் அழுகிக் கெடுவது அதன் முடிவு.

கட்டி அணைத்திடும் பெண்டிரும் மக்களும் காலத்தச்சன்
வெட்டி முறிக்கும் மரம்போல் சரீரத்தை வீழ்த்திவிட்டால்,
கொட்டி முழக்கி அழுவார்; மயானம் குறுகி அப்பால்
எட்டி யடி வைப்பரோ இறைவா! கச்சி ஏகம்பனே!

எனப் பட்டினத்தடிகளார் கூறும் வண்ணம் 'முது காட்டில் காக்கை உகக்கும் பிணம்' என ஆகிறது. காகம் மட்டும் தானா? அதனோடு கழுகுகளும் பேய்களும், நாய் நரிகளும் சூழ்ந்து அவ்வுடலைப் பிய்த்துத் தின்று திமித மிடுகின்றன.

பிரம்ம சிருஷ்டியில் உண்டாகி யமனால் அழிக்கப்படும் இச்சரீரத்தை, உண்மை எனப் பொருள்படும் மெய் என்று சொல்லத் தகுமா? நாம் இச்சரீரத்தை நம்பியே, பற்பல அநீதிகளையும், துணிவாக சில சமயங்களில் செய்து விடுகின்றோமே! நமக்கு மேலாக, ஒரு உண்மைப பொருள் உண்டு, உள்ளது என்றுதான் நினைக்கின்றோமா? இதனை எல்லாம் நமக்கு அறிவுறுத்துவதற்கெனறே தாயுமானார் இறைவனைப் பின்வருமாறு முறையிடுகினறார்.

காகமோடு கழு கலகை நாய்நரிகள்
சுற்று சோறிடு துருத்தியை,
காலிரண்டு நம வாசல் பெற்றுவளர்
காம வேள் நடன சாலையை,
மோக வாசைமுறி யிட்ட பெட்டியை,மு
மல மிகுந்தொழுகு கேணியை,
மொய்தது வெங்கிருமி தத்து கும்பியை
முடங்கல் ஆர் கிடை சரக்கினை

---

மந்திரம், தெய்வம், மருந்து, குருவருள்
புந்தியினில் நம்பில், புனிதபயன் ஆகுமரோ.

மாக விந்த்ர தனு மின்னை யொத்திலக
வேத மோதிய குலாலனுர்
வனைய வெய்யதடி காரனுன யமன்
வந்தடிக்கு மொரு மட்கலத்
தேகமான பொய்யை மெய்யெனக் கருதி
ஐய ! வைய மிசை வாடவோ ?
தெரிவதற் கரிய பிரமமே ! அமல
சிறசுகோதய விலாசமே !

[மாக இந்த்ரதனு ஆகாயத்தே இருண்ட மேகங்களின்பால் சூரிய ஒளியால் தோன்றிப் பிரகாசிக்கக் கூடிய பல வர்ணங்கள் கூடிய வில. குலாலன் - குயவன். (இங்கே) பிரமன்.

தாயுமானுர் இறைவனைத் தெரிவதற்கரிய பிரம்மமே ! எனக் குறிப்பிடுகிருர். ஏனெனின் ஊனக் கண்களுக்குத் தோன்றக் கூடிய பொருள்களனைத்தும் அழியக் கூடியன. ஞானக் கண்ணினுல் உணரப் படுபவனே இறைவன். இறைவனுக்குப் பேதம் என்பதில்லை. ஆண் என்றும் பெண் என்றும் அலி என்றும், அது இது எனவும் எவ்வகையிலும் தோற்றமில்லா திருப்பவனும், வேண்டுவார் வேண்டும் உருவத்தில் தோன்றுபவனும், மிகப்பெரும் சுகஸ்வரூபமாக விளங்குபவனும் இறைவன ஆதலின, தாயுமானுர் இறைவனை சுக வாரியே ! அதாவது இனபசாகரமே எனவும் அழைக்கின்றுர்.

---

புன்மையர்முன ஆனரேுர் ஒதுஙகுவா, பூட்கையுந்
பனறிகண்டே விலகிப் போதல்,பயம் கொணடேயோ ?
(பூட்கை - யானை)

இறைவன் வேண்டுதலும் வேண்டாமையும் அற்றவன். அதாவது விருப்பமும் வெறுப்பும் அற்றவன். பக்தர்கள் எவ ராய் இருப்பினும், எக்குலத்தவராய் இருப்பினும்; எத்தொழில் புரிவோராயினும், அவர்கள் முழுமனதுடன், உறுதியுடன் தன்னை சரணடைந்தனரெனில, அவர்களை அழியா ஆனந்த நிலையில் இருத்தும் அமுதமாகி விடுகின்றான். இதனை நம்மாழ்வார் எனும் பெரியார் வெளியிடுகின்றார்.

கொள்கை - கொள்ளாமை இல்லாதான்
எள்கல் - இராகம் இல்லாதான்
விள்கை - விள்ளாமை விரும்பி
உள் கலந்தார்க்கோர் அமுதே!

[கொள்கை - அங்கீகரித்தல். கொள்ளாமை - பகிஷ் கரித்தல். எள்கல - வெறுத்தல். இராகம் - விரும்புதல். விள்கை - கனிவு, மலர்சசி. விள்ளாமை - பிரியாமை, வேற் றுமையை மனதில் கொளளாதிருததல். உள் கலத்தல் - தம் முள் உறையும் இறைவனை உணர்நது அவனுடன் ஒன்றுதல்.]

இவ்விஷயங்கள் இவ்வாறுனதால் இவ்வுடலில் இருக்கும் நாம், அறிவின் உதவிகொண்டு பிறவிக்கடலை நீந்திக் கரை யேறுவதே இறைவனுக்கு செய்யும் தொண்டும் வழியும் ஆகும்.

---

நம்பிக்கை வைத்தால், நலம்விளையும்; நம்பார்க்கு
வெம்புகின்ற சூழ்நிலை, வேதனையே செய்யும்மே.

## THE WORLD SCHOOL

Inspiring memories of boyhood, as a student of the Findley High School at the *third, fourth and fifth forms*, rush to my mind as I am attempting to pen a few pleasant remembrances of student psychology The school is a perennial institution Teachers may come and go. Pupils may come and go. But the school goes on for ever. The world is a school and every life passes through it from class to class, and he is wise who sees in it the one God of the universe who plays about us in our infancy. The struggles in life are but the attempts to remove the *boulders that our* sense of separitism erects across the smooth sailing path of agreeability which provides the direct approach of love between God and *man*. God is eternal. His manifestation in the world appears in many forms -- the eternalities in creation, The mighty mountains, the wide-spread rivers, the expanse of oceans, the sun and the moon, and the stars declare the potency of the Lord's physical expression. The meta-physical expression of the Lord is Love. This is the *highest and noblest expression of the* eternity of Divine existence. Every form, even as of nonform, is but the apparent *separatist expression of the inseparable entity* which the scriptures describe as God. Love is the divine universal link between all God forms. To keep to love as our outlook, our

contact, and our realisation, is the noble lesson learnt at school, and may the roots of that inspiration laid at School where homogeneity, understanding, integral unity and zeal of service constituted the atmosphere, serve the gradations of mankind in the needs of the world-school of life, so that humanity may sprout in multitudinous ways of mutual help and blessedness. These be the best wishes of an old old school student, now a student at the Universal School of nature and humanity. —*Thiruppugazh Mani.*

REQUEST: Let your Annual Subscription of Rs. Three be remitted for the next year 1962 April to 1963 March.


Compliance with Rule 8 of the Registration of Newspapers (Central) Rules 1956

FORM IV

AMIRTHAVACHANI

| | | |
|---|---|---|
| 1. Place of Publication : | ... | 54, Bunder Street, Madras-1. |
| 2. Periodicity of the Publication : | ... | Monthly. |
| 3. Name of Printer : | ... | V. Thirunavukarasu |
| Nationality : | ... | Indian |
| Address : | ... | 65, Tiruppalli Street, Madras-1. |
| 4. Name of Editor : | ... | S. Muthuswami |
| Nationality : | ... | Indian |
| Address : | ... | 54, Bunder Street, Madras-1. |
| 5. Name of Publisher : | ... | S. Muthuswami |
| Nationality : | ... | Indian |
| Address : | ... | 54, Bunder Street, Madras-1. |
| 6. Name and Address of individuals who own the newspapers . | ... | Owned by The United Concern (registered firm) 54, Bunder Street, Madras-1. |

I S. Muthuswami, hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

Dated 11th March, 1962

(Sd.) S. MUTHUSWAMI,

Signature of Publisher.

உன்மீது வைத்த நினைவான பற்றை,
ஒருபோதும் மாற்ற நினையேன் ;
என்மீது வைத்த புரிவாமுன் நட்பும்,
இடையா திருக்க ; ஒருகால்
என்மீது பட்சம் இலியாய், எனைப்பெ
ரிதுநீ மறக்க வரினும்,
உன்மீது குற்றம் உரையேன்; எனக்குள்
உணர்வாக உற்ற குகனே !

No. 1506
ASOKA